Registered as a Newspaper

இம்போட்டற்
நைலெக்ஸ் சாறிவகைகள்
இந்தியன்
பட்டுப் புடைவைகள்
கண்கவர் பிளவுஸ் பீஸ்
வகைகள்
கிறவுண்ஸ்
22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூ 2. 50

தரமான சேட்டிங்
* சூட்டிங்
கண்கவர் ரெடிமேட் ஆடைகள்
சின்னஞ்சிறுர்களின் சிற்றுடைகளுக்கு
கிறவுண்ஸ்
22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

சுடர்- 4 விபவ ஸ்ரீ மாசி மீ 15 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1409 றஜப் பிறை 19 (26-02 1989) UTHAYAN -A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்- 70

# விருப்பமான எம்.பிக்கள் மூலம் வந்து சந்தியுங்கள்!

## ஜே.வி.பி; விடுதலைப் புலிகளை மீண்டும் அழைக்கிறார் பிரேமா

கொழும்பு, பெப்ரவரி. 26

சமாதானப் பேச்சுக்களுக்கு வருமாறு, மக்கள் விடுதலை முன்னணியினருக்கும் (ஜே. வி, பி. யினருக்கும்), தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கும், ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச மீண்டும் அழைப்பு விடுத்திருக்கிறார்.

என்னை நேரில் சந்திக்கத் தயக்கம் இருந்தால், மக்கள் அவையில் தெரிவு செய்த உங்களுக்கு விருப்பமான எம். பிக்கள் மூலம் என்னைச் சந்திக்கலாம்; சந்தியுங்கள் - இவ்வாறு ஜனாதிபதி தமது அழைப்பில் குறிப்பிட்டார்.

கொழும்பு, பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடந்த மாநாட்டில் பேசுகையிலேயே ஜனாதிபதி இந்த அழைப்பை விடுத்தார்.

வறுமை ஒழிப்புத் திட்டத்தின் (ஜனசவிய) இறுதி ஏற்பாடுகளை ஆரம்பித்து வைப்பதற்காக நடத்தப்பட்ட இந்த மாநாட்டில் அமைச்சர்கள், மாகாண சபைகளின் அமைச்சர்கள், அமைச்சுச் செயலாளர்கள், மற்றும் அரச அதிபர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வடக்கில் உள்ள தீவிரவாதிகளும், தெற்கில் உள்ள தீவிரவாதிகளும் அமைதிக்கான பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும் என்று ஜனாதிபதி பிரேமதாஸ அப்போது கேட்டுக்கொண்டார்.

பேச்சுவார்த்தைக்கு வருமாறு ஜே வி பி யினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் நான் மீண்டும் அழைப்பு விடுக்கிறேன்.

என்னுடன் வந்து நேரடியாகப் பேசுவதற்கு அவர்களுக்குத் தயக்கமாக இருந்தால் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் அரசியல் தலைவர்கள் மூலம் அவர்கள் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள முடியும். விருப்பமான எம் பிக்கள் மூலம் என்னைச் சந்திக்க முடியும்.

நாட்டில் புதியதொரு சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதற்கான முயற்சியில் நாம் தற்போது ஈடுபட்டிருக்கிறோம்.

அதற்கு வன்செயல்கள் இடையூறாக இருக்கக் கூடாது.

வறுமை ஒழிப்புத் திட்ட வேலைகளை மேற்கொள்வதற்காக நாடு 30 ஆயிரம் கிராமங்களாகப் பிரிக்கப்படும்.

இத்திட்டத்தின் முதற் கட்டத்தில் 200 ஆயிரம் குடும்பங்கள் பயனடையும் என்றார். [அ-ஐ எ]

முச்சந்தி முரளி



அப்ப தமிழர் தொடர்புக்கு "தனி" இடம் தன் குடும்பமோ......!

## புத்தர் சிலையருகே நின்று படம் எடுத்த பெண் கைது

பாங்கொக், பெப் 26

மார்பக அங்கி இன்றி வெங்காயச் சருகு போன்ற ஆடை அணிந்து புத்தர் சிலை ஒன்றின் தலைக்கு அருகில் நின்று படம் பிடித்த 23 வயது இளம் பெண் ஒருத்தி தாய்லந்து பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

செல்வி காராயஸ் என்ற இப் பெண் அமெரிக்காவின் பிரபல பாஷன் மொடல் அழகி.

புத்தர் சிலைக்கு அருகில் அவரை நிற்க வைத்து படம் பிடித்த படப்பிடிப்பாளர் சான்ரே டிராஸியோவும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

நியூயோர்க்கில் இருந்து வெளிவரும் வோக் (Vogue) பாஷன் சஞ்சிகைக்காக இப்படம் பிடிக்கப்பட்டது.

பாங்கொக் அருகே உள்ள புக்கெற் தீவில் உள்ள பௌத்த ஆலயத்தை அசுத்தப்படுத்தியதாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குற்றவாளியாகக் காணப்பட்டால் இருவருக்கும் கூடியது 7 ஆண்டுச் சிறையும் 560 டொலர். அபராதமும் விதிக்கப்படும். (ஒ எ)

## தமிழ்க் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்குக

### பாலகுமாரன் கோரிக்கை

கொழும்பு பெப் 26

வெலிக்கடை சிறையில் வைக்கப்பட்டுள்ள நூற்றுக்கும் அதிகமான தமிழ் அரசியல் கைதிகள் சம்பந்தப்பட்ட வழக்குகளைப் பரிசிலிக்க நடவடிக்கை எடுக்கும்படி ஈரோஸ் அமைப்பின் தலைவர் திரு வே பாலகுமாரன் இந்திய, இலங்கை அரசுகளைக் கேட்டுக் கொண்டுள்ளார் என்று இந்திய வானொலி தெரிவித்தது.

அவர் மேலும் சொன்னதாவது:

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பது வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இயல்பு நிலையை விரைவாக ஏற்படுத்தவும் மக்களிடையே நம்பிக்கையை

[8 ஆம் பக்கம் பார்க்க]

### சுபநேரம்

26-02-1989
மாசி-15
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:
09 29 முதல் 10 59 வரை
ராகுகாலம்:
04 59 முதல் 06.29 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## இரு கருகிய சடலங்கள்

கொழும்பு பெப் 26

அனுராதபுரம் மாவட்டத்தில் இரண்டு இனந் தெரியாத கருகிய சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

சடலங்களில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன (ஒ-எ)

## மரண விசாரணை அதிகாரி கொலை

கொழும்பு, பெப் 26

அனுராதபுரம் திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. சோமபால லியனகே என்பவர் இனந்தெரியாத நபர்களினால் கடந்த வியாழன் இரவு அவரது வீட்டில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். (ஒ-எ)

## தேடுதல்

மாங்குளம், பெப் 26

மாங்குளம் கரிப்பட்ட முறிப்புப் பகுதியில் இந்திய அமைதிப்படையினர் தொடர்ந்து தீவிர தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் இப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. [உ-94]

ஆட்சேபனை மனு

## 5 நீதியரசரின் விவரம்

கொழும்பு, பெப் 26

ஜனாதிபதித் தேர்தல் ஆட்சேபனை மனுவை விசாரிக்கவிருக்கும் ஐந்து உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழுவில் இடம் பெறுபவர்கள் பற்றிய விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

அவர்கள் பெயர்கள் வருமாறு:

1, பிரதம நீதியரசர் பரிந்தரணசிங்க
2, எச். டி. தம்பையா
3, ஜி. பி எஸ். டீ சில்வா.
4, எம். ஜமீல்
5, டாக்டர் ஏ ஆர் பி அமரசிங்க

[முன்னர் வந்த செய்தி 8ஆம் பக்கத்தில்]

(ஒ-எ)

## பெண்களுக்கு அதிகாரி கூறும் அறிவுரை

கொழும்பு. பெப் 26

தொழில் வாய்ப்புத் தேடி லெபனானுக்குச் செல்லவேண்டாம் என்று இலங்கைப் பெண்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று நடந்த கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் வெளிவிவகார அமைச்சு அதிகாரி திரு. முனசிங்க இந்த வேண்டுகோளை விடுத்தார். (ஒ-எ)

## பொற்பதி அகதிகளுக்கு உதவுவர்

கொக்குவில் பொற்பதிப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற அசம்பாவிதங்களை ஆட்சேபித்து மாணவர் இளைஞர் பொது மன்றம் (கஸ்) அறிக்கை ஒன்றை வெளி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாப் பகுதியில் 3 இளைஞர் சுட்டுக் கொலை

வவுனியாவிலுள்ள கோவிற்குளம், சமனங்குளத்தடி, கல்வீரன்குளம் ஆகிய பகுதியில் மூன்று இளைஞர்கள் சனியன்று அதிகாலை சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

ஆயுதம் தாங்கிய குழு ஒன்று வீடுகளிலிருந்து இவ்விளைஞர்களைக் கூட்டிச் சென்று சுட்டுக் கொன்றதாக ஊர் வாசிகள் தெரிவித்தனர்.

இந்த மூவரில் ஒருவர் பூஸா தடுப்பு முகாமிலிருந்து விடுதலையானவர் எனவும் ஏனைய இருவரில் ஒருவர் மாணவரெனவும் மற்றவர் வர்த்தகரெனவும் அடையாளம் காணப்பட்டிருப்பதாக கொழும்பு பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-ஐ-164)

## பொற்பதிப் பகுதியில் கைதானோர் விடுதலை

கொக்குவில், பெப் 26

கொக்குவில் பொற்பதி வீதிப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டோர் விடுதலை செய்யப்பட்டனர்

எனினும் கடந்த புதன்கிழமையன்று இப் பகுதியில் ஊரடங்கு உத்தரவு அமுலில் இருந்தபோது கைது செய்யப்பட்ட இளைஞர்களில் ஒரு சிலர் இன்னும் விடுவிக்கப்படவில்லை.

இப்பகுதியில் இடம் பெற்ற சம்பவங்களை அடுத்து அகதிகளாக இடம்பெயர்ந்தோரில் ஒரு சிலர் தமது வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர். [உ-69]

## இளைஞரின் சடலம்

யாழ்ப்பாணம். பெப் 26

முல்லைத்தீவு மாமூலைப் பகுதியில் காட்டுக்குள் இருந்து இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இவ்விளைஞர் கோர்தல் அன்று பகல் வீட்டிலிருந்து புறப்பட்டதாகவும், அதன் பின்னர் காட்டுக்குள் சடலமாகக் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொலையுண்ட இளைஞர் செல்வரத்தினம் (சுதன்) என அடையாளம் காணப்பட்டுள்ளது. (ஒ-94)

வெளி மாவட்ட

## கச்சேரிகள் அனைத்திலும் தமிழ் அதிகாரிகள்!

கொழும்பு, பெப் 26

கச்சேரிகளில் தமிழருடன் தமிழில் தொடர்பு கொள்ள தமிழ் அதிகாரிகளும், மற்றும் தமிழ் தட்டெழுத்தாளர்கள், சுருக்கெழுத்தாளர்களும் நியமிக்கப்படுவர்.

பொதுப்பணித்துறை துணை அமைச்சர் திரு. சந்திரா பண்டார முன்தினம் கண்டவாறு செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:

தமிழ் மாவட்டங்கள் அல்லாத வெளி மாவட்டங்களிலுள்ள ஒவ்வொரு கச்சேரியிலும் குறைந்தது ஒரு தமிழ் அதிகாரி நியமிக்கப்படுவார்; நுவரெலியா போன்ற பகுதிகளில் கூடுதலானோர் நியமிக்கப்படுவர்.

தமிழில் வேலை செய்யக் கூடிய சுருக்கெழுத்தாளர்களும் தட்ட

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிமா பண்டாரநாயக்கா எதிர்க்கட்சித் தலைவர்

### சு. கட்சி எம். பி. க்கள் முடிவு

கொழும்பு, பெப் 26

சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா எதிர்க்கட்சித் தலைவராக இருப்பார்.

சுதந்திரக் கட்சியின் மத்திய கமிட்டி கடந்த [illegible] கூடி எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு திருமதி பண்டாரநாயக்காவைத் தெரிவுசெய்தது.

வருகிற புதன்கிழமை சுதந்திரக்கட்சி நாடாளுமன்றக் குழு கூடி இதனை முறையாக அங்கீகரிக்கும் என்று அறிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## மாத்தளையில் ஜீப் மீது தாக்கு; இன்ஸ்பெக்டர் உட்பட மூவர் பலி!

கொழும்பு. பெப் 26

மாத்தளையில் நேற்று ஒரு சப்இன்ஸ்பெக்டரும் இரண்டு பொலீஸ் கான்ஸ்டபிள்களும் தென்பகுதி தீவிரவாதிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

அவர்களது தானியங்கித் துப்பாக்கிகளும் அபகரிக்கப்பட்டன

இந்தச் சம்பவம் பற்றி கூறப்படுவதாவது:-

ஜீ சி ஈ. பரீட்சைக்கான விடைத்தாள்களும், ஏனைய ஆவணங்களும் மாத்தளையிலுள்ள ஒரு பரீட்சை நிலையத்துக்கு பொலீஸ் பாதுகாப்புடன் கொண்டுவரப்பட்டது.

அப்போது ஜே வி பி இயக்கத்தினர் என சந்தேகிக்கப்படுவோர் மறைந்திருந்து சம்பந்தப்பட்ட பொலீஸ் ஜீப் மீது திடீர் தாக்குதல் நடத்தினர்.

இந்தச் சம்பவத்தின் போது ஜீப்பில் பிரயாணம் செய்த ஒரு சப் இன்ஸ்பெக்டரும் இரண்டு பொலீஸ் கான்ஸ்டபிள்களும் உயிரிழந்தனர். (ஒ-ஐ)

சக தொழிலாளிகளைத் தாக்கிவிட்டு

## இயந்திரப் படகுடன் மீனவர் தலைமறைவு

குருநகர் பெப், 26

தொழிலுக்கு இயந்திரப் படகில் ஒன்றாகச் சென்ற சகதொழிலாளர்களைத் தாக்கிக் கடலில் வீசிவிட்டு இயந்திரப் படகுடன் ஒருவர் தலைமறைவாகி விட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது

மேற்படி படகில் சென்ற ஞானப்பிரகாசம் சந்திரன் (வயது 17) என்பவர் நெடுந்தீவு கடற்றொழிலாளர் சங்கத்தின் உதவியுடன் நெடுந்தீவு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தேவசகாயம் தேவதாஸ் (வயது 24) என்பவரது நிலைமை தெரியவில்லை.

குருநாதன் [வயது 21] என்பவரே சகதொழிலாளர்களைத் தாக்கிக் கடலில் தள்ளிவிட்டு இயந்திரப் படகுடன் தலைமறைவாகி இருப்பதாக அறியப்படுகிறது (ஒ-51)

## ஒரு கோடி ரூபா நஷ்டஈடு கோரி ரோஹணவின் மைத்துனர் அரசுக்கு எதிராக வழக்கு

கொழும்பு. பெப் 26

அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கில் அரசாங்கத்திடமிருந்து ஒரு கோடி ரூபா நட்டஈடு கோரி டாக்டர் எஸ். சந்திரா டெர்னன்டோ என்பவர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்திருக்கிறார்.

ஜே வி பி இயக்கத் தலைவர் ரோஹண விஜயவீராவின் மைத்துனர் இவர்.

கம்பஹாவில் கம்பஹா நர்ஸிங் ஹோம் என்ற பெயரில் தனிப்பட்ட ரீதியாக வைத்தியத் தொழிலை இவர் நடத்தி வந்தார்.

17-8-1987இல் இவர் பொலீஸாரால் கைது செய்யப் பட்டார். அவசரகாலச் சட்டத்தின் கீழ் இவர் தடுத்து வைக்கப்பட்டார்,

2-11-1987 இல் கம்பஹா நீதிவான் முன் ஆஜர் செய்யப்பட்டார், அப்போது பிணையில் இவர் விடுவிக்கப்பட்டார்-

நீதிமன்றத்தில் இருந்து வெளியே வந்த மறுகணம் மீண்டும் பொலீஸாரால் இவர் கைது செய்யப்பட்டு சி ஐ டி அலுவலகத்தின்

(8ஆம் பக்கம் பார்க்க)

## சூட்டுக் காயங்களுடன் கம்பத்தில் சடலம்

வவுனியா, பெப் 26

ஓமந்தை இறம்பைக் குளம் பகுதியில முதியவர் ஒருவரின் சடலம் கம்பம் ஒன்றில் சூட்டுக் காயங்களுடன் கட்டப்பட்ட நிலையில் வெள்ளிக்கிழமையன்று கண்டு பிடிக்கப்பட்டது

இவர் முன்னர் கைக்கடை ஒன்றின் உரிமையாளராக இருந்த செல்லத்துரை என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

இயக்கம் ஒன்று இவருக்குத் தண்டனை வழங்கியதாகச் சொல்லப்பட்டது. (ஒ-164)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Honda C- 50 94 Sri தொடர் இலக்கமுடையது இம்மோட்டார், சைக்கிள் பூசர் மடச் சந்தியில் (கோப்பாய் வரவேற்கிறது) எனும் Board க்கு அருகாமையில் S Rajaratnam என்பவர் வீட்டில் பார்வையிடலாம். (9614)

---

புதியதும் பாவனையில் உள்ளதுமான Honda MB 8, 95 ஸ்ரீ தொடர் இலக்கமுடையதுமான மோட்டார் சைக்கிள் புதிய Oven உடன் அமைந்த (போட்டபிள் மொடல்) மின்சாரக் கருவிகளும் உடன் விற்பனைக்குண்டு தொடர்புகளுக்கு: நித்தியானந்தன், 69 பலாலி வீதி, திருநெல்வேலி சந்தி (9568)

---

மிளகாய் அரைப்பதற்குரிய மெசின் கிரைன்டர் 2 கோஸ் பவர்—10 கோஸ் பவர் மோட்டர் மெயின் சுவிச் ஸ்ராட்டர் சுவிச் 1½ வாட்டம் 2 இஞ்சி பெல்ற் மொடல் இவையாவும் இங்கிலிஷ் சாமான்கள் இதுடன் வொக்ஸ்வகன் என்ஜின், கியர் பொக்ஸ் ஸ்ரேரிங் பொக்ஸ் 13, 100 A மொடல் முழுமையாகவும் பகுதியாகவும் விற்பனைக்கு உள்ளன. தொடர்பு:- T. சுந்தரராஜா, கச்சாய் றோட், 4 ஆம் ஒழுங்கை சாவகச்சேரி. (9335)

---

பாவித்த தளபாடங்கள், மேசை, கட்டில், Show case அலுமாரி, கண்ணாடி மேசை, ஹோல் செற், விருந்தை செற், சப்பளம், மணிக்கூடு, Record player, சாப்பாட்டு மேசை, கதிரைகள், Fan, மற்றும் பல பொருள்களும் உடன் விற்பனைக்கு உண்டு. V. சிவராம் 69, அம்மன் றோட், கந்தர்மடம் (9571)

## FOR SALE

Single owner Doctor Honda C. G- 125. sparingly used good condition Contact Dr. Paramanathan 70 Arulampalam, Lane, Ariyalai, Jaffna. (9567)

## காணி விற்பனை

கோப்பாய் VCக்கு முன்பாக நல்ல சுற்றுடலில் வீடு கட்டக்கூடிய காணி 3 பரப்புத் துண்டுகளாக 6 பரப்பு விற்பனைக்குண்டு. தொடர்பு; கே. துரைரத்தினம், கலட்டி ஒழுங்கை. கோண்டாவில் மேற்கு. கோண்டாவில் [9617]

## கோழிக்குஞ்சு விற்பனைக்கு

பிறிமா இன ஒரு நாள் புறொயிலர் குஞ்சுகள் 28- 2- 1989 இல் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. S M காட்வெயர், 11/6, ஸ்ரான்லி வீதி, திருமகள் ஸ்ரோர்ஸ் சிவலிங்கப் புளியடி. CSK பாம் சென்ரர், கச்சேரி - நல்லூர் வீதி, கிருஷ்ணா பாம சென்ரர், திருநெல்வேலி. (9554)

---

Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக் கோழிகள் சேவற்கோழிகள், குஞ்சுகள், விருத்துக் குஞ்சுகள் என்பன குறைந்த விலையில் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுகாதார முறைப்படி சுத்தஞ் செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை நல்லூர். (C/1186)

## கோழிக்குஞ்சு விநியோகம் Uplands Farm

நாற்பத்தைந்து நாட்களில் வளர்ச்சியடையும் (Pekalb) இன பிறவுண் சேவல் விலை ரூபா 4.50 (23-2-89) தொடக்கம் 4 நாட்கள் விநியோகிக்கப்படும். அத்துடன் கறுப்பு பிளிமத் வரிக் குஞ்சும் உடனே வந்து பெற்றுக் கொள்க. இல 9 சந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அண்மையில்) (9605)

---

Nallur Farm Centre Prima Lohman வெள்ளை சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவற் குஞ்சுகள், Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், Hyline கறுப்பு வெள்ளை Silver பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் விநியோகிக்கப்படும் 25 குஞ்சுகளுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு படிப்படியாக விலையில் சலுகை உண்டு C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19. முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (C/1185)

## முச்சக்கர சைக்கிள் விற்பனை

புதிய மூன்று சில்லு பாரம் ஏற்றும் சைக்கிள் ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு; புஸ்பா அன்கோ, 128, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் (C/1705)

## ஒருநாள் கோழிக் குஞ்சு

சகல இன பேடு சேவல் புறொயிலர் R. I. R (பிளிமத்) கறுப்புப் புள்ளி சேவல் குஞ்சுகள் 1 - 3 - 89 புதன் அன்று விநியோகிக்கப்படும். தொடர்ந்து ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும். விநியோகிக்கப்படும் முன் கூட்டியே பதிவு செய்க K. சக்தி, சம்பியன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு S T R & சன் மால் கடை, திருநெல்வேலி சந்தி. (9613)

## தேவை

எமது பதிப்பகத்திற்கு லிகிதர் ஒருவரும், பியோன் ஒருவரும் தேவை. லிகிதர் G C E A/L சித்தியடைந்திருத்தல் வேண்டும். வயதெல்லை 20 30 யாழ் மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது தகுந்த அத்தாட்சிப் பத்திரங்களுடன் 28 2- 89 காலை 10 மணிக்கு நேரில் வரவும் அஸ்ரன்பதிப்பகம், C/o அஸ்ரன் இன்ஸ்ரிரியூட் 166/1, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம் (C/1701)

---

யாழ்ப்பாணம் பிரதான சுற்றுடலில் வியாபார ஸ்தாபனம் அமைப்பதற்கு ஒரு பரப்புக் காணியுடன் கட்டிடத்துடனோ அல்லது வெறும் காணியாயினும் சரி அல்லது அதற்குக் குறைந்த இடமாயினும் சரி இருந்தால் விலை விபரத்துடன் தொடர்பு கொள்ளவும்: 444 C/o உதயன். (9336)

---

நல்ல நிலையிலுள்ள 'HONDA' Benley Supper அல்லது C 90 உம் மரக்கடைச்சல் மெசினும் உடன்தேவை தொடர்பு யேசுதாசன், புனித ஆசிர்வாதப்பர் கோயில், கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (9564)

## காசாளர் தேவை

எமது ஸ்தாபனத்தில் காசாளராக கடமையாற்ற ஒரு பெண் தேவை ஆங்கில தட்டெழுத்து தெரிந்திருத்தல் அவசியம். யாழ் மாநகர எல்லைக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. கடிதம் மூலம் விண்ணப்பிக்கவும். ஆட்கிறபிக் 538 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C/1691)

## தவறிவிட்டது

சுலோமா லெப்பை ஐஃபர் என்பவரின் 620724084V இலக்கமுடைய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ் பல்கலைக்கழகத்தில் ஒப்படைக்கவும். (9615)

## வகுப்புகள்

108, Brown Road, Jaffna அசேதன இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ் ஆரம்பம் 27-02-89 திங்கள் 43.0 p.m (திங்கள், புதன் 4.30 p.m) (9616)

## London O/L English June 89

Practice classes begin on4.3.89. Sat/ Sun/Wed Time 5-6 p.m Contact S.B Iyar, 12, Wyman Road, Nallur. (9559-

## Spoken English

தொழில் நிறுவனங்களில் வேலை செய்பவர்களுக்கும் சர்வகலாசாலை மாணவர்களின் வசதியை முன்னிட்டு புதிய பிரிவு Spoken English வகுப்புக்கள் ஆரம்பம்;- 2- 3- 89. செவ்வாய் வியாழன் நாட்களில் நேரம் மாலை 5 - 6 30 மணி வரை S. B Iyar 12, வைமன் வீதி, நல்லூர். (9558)

## SCIENTIFIC DRESS MAKING

புதிய வகுப்புகள் ஆரம்பம் 10 - 3 - 89 இலகுவான முறையில் கற்பிக்கப்படும். உடனடியாக தொடர்பு கொள்ளவும்! No 19, வைமன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம். (9570)

## கல்வி

பாலராசிரியர் பயிற்சி நெறி - 1989 விரைவில் ஆரம்பமாகின்றது. க. பொ. த: (சா/த) சித்தியடைந்த பெண்கள் விண்ணப்பிக்கலாம். சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில் நடைபெறும். வரமுடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். முத்திரை யொட்டிய தபாலுறையுடன் விண்ணப்பிக்குக; பாலர் ஆசிரியர் சங்கம், 42 பிரப்பங்குளம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் (9350)

## NEW CITY TRADERS

சகல விதமான T V டெக், ரேடியோ, அன்ரனா பூஸ்ரர், வயர்பைப் செற் T D. K. Maxell Audio Video கசற் வீட்டுக்குத் தேவையான மணிக்கூடு, சிறுவர் விளையாட்டுப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளச் சிறந்த ஸ்தாபனம்: New City Traders 135 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். C/ 1522)

## சேவை

காலியாயுள்ள உங்கள் வீட்டை எங்களிடம் ஒப்படைத்து பாதுகாப்பான முறையில் வாடகையையும் முற்பணமும் வாங்குவார்கள். சேதமான வீடுகளும் எடுத்துத் திருத்தப்படும். Farjmal Enterprises 19/3. Colombogam Road Jaffna, (Opposit Chundukuli Girlse College) (C/1475)

# 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி



சிவபதமடைந்த சிரோன்மணி

திருமதி

## செல்லம்மா சின்னத்துரை

அவர்கள்

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 10 - 02 - 1900 | 28 - 01 - 1989 |

ஆல்போல் தழைத்து,
அறுகுபோல் படர்ந்து நிற்கும்
பாரிய குடும்பத்தின்
ஆணிவேரான அம்மா!
பரிபூரணமுற்ற
புவிவாழ்வை முடித்து நீங்கள்
பரமனடி பற்றினாலும்
பாசத்தால் பாவிகள் அழுகின்றோம்!
சாந்தி. சாந்தி!! சாந்தி!!!

27 - 02 - 89 திங்கட்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய சமய நிகழ்ச்சியிலும் மதிய உணவிலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

மக்கள், மருமக்கள்,
சுற்றத்தார்.

புகையிரத நிலையத்துக்கு முன்,
புங்கன்குளம்,
யாழ்ப்பாணம். (9574)

# புஸ்பா அன் கோ

## தரத்திலும் உறுதியிலும் சிறந்த

- இலங்கை ஓடுகள் மற்றும்
- விதம் விதமான பூச்சாடிகள்
- பல வடிவங்களில் கிறில்கற்கள் (சீமெந்துப்பூக்கற்கள்)
- செங்கற்கள்
- சீமெந்து

இலங்கை மட்பாண்ட கூட்டுஸ்தாபன பொருள்களை ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்.

**புஸ்பா அன் கோ,**
514, கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம். (C/1491)

# 'SPOKEN ENGLISH'

கவிலங்காவின் புதிய வெளியீடாக தமிழில் உச்சரிப்புக்கள் கொடுக்கப்பட்டு ஆங்கிலத்தை குறுகிய காலத்தில் பயின்று பேசுவதற்கு உதவும் நூலாக

"SPOKEN ENGLISH"

விலை — 35/- வி. பி. பி. யிலும் பெறலாம்

**KAVILANKA BOOK CENTRE**
151, JAMPETTAH STREET,
COLOMBO- 13. (9390)

# வீடும் வளவும் விற்பனைக்கு

1. குராவத்தை புனித திரேசா ஆலயத்துக்கு கிட்ட தற்சமயம் ஞா. பாக்கியநாதன் (அரசு) இருக்கும் வீடு. 3 பரப்புக் காணியுடன், பங்கு இல்லாத தனிக் கிணற்றுடன்.
2. குராவத்தை அம்மன் கோயிலுக்கு முன்பாக உள்ள வீதி அருகில் 7 பரப்புக் காணி,
3. யேமன் "BOSH" இருகதவு குளிர் சாதனப் பெட்டி,

இவை உடன் விற்பனைக்கு உண்டு.


தொடர்புகொள்க —
R. E. யோசேப் (குணசிங்கம்)
குமாரசுவாமிப் புலவர் வீதி,
சுன்னாகம்,

சுன்னாகம் புகையிரத நிலைய பாதையில் இருந்து 200 யாருக்குள் - நீர் வடிகால் கிணற்றுக்கு அருகில் (9394)

# இயக்குநர் சபைத் தலைவர்

கோப்பாய், பெப் 26 வலி கிழக்கு தென் பகுதி ப நோ. கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபையின் தலைவராக திரு. சபாபதி நவரத்தினம் தெரிவு செய்யப்பட்டார். [இ-72]

# நன்றி கூறுகின்றோம்....



## அமரர் K. S. E. சேவியர்

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 29 - 12 - 1936 | 17 - 02 - 1989 |

அன்னாரின் மரணச்சடங்கு நிகழ்ச்சிகளின் ஒருபகுதியாக அன்னாரின் பூதவுடலை அவர் நேசித்த கல்லூரியில் வைத்து இறுதி மரியாதை செலுத்திக் கௌரவித்ததுடன் அவ்வப்போது பல்வகைப்பட்ட உதவிகளையும் வழங்கிய பரியோவான் கல்லூரி அதிபருக்கும் ஆசிரியர்களுக்கும்,

கற்பித்த ஆசானின் மீது கொண்ட நீங்காத பற்றுக்காரணமாக அன்னாரின் மரணத்தையொட்டி பல கண்ணீர் அஞ்சலிகளை வெளியிட்டும். பல்வேறு வழிகளில் உதவிகளையும் ஆதரவுகளையும் அளித்த அனைத்து மாணவச் செல்வங்களுக்கும்,

அமரர் சேவியர் மீது கொண்ட அழியாத அன்பு காரணமாக அன்னாரது மரணச் சடங்கில் கலந்து கொண்டு. பல்தரப்பட்ட உதவிகளை நல்கி எமது நீங்காத துயரத்தினையும் பகிர்ந்து கொண்டதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திபடையப் பிரார்த்தித்த ஆயிரமாயிரம் அன்பு நெஞ்சங்களுக்கும்,

எமது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், உற்றார், உறவினர்.

[9576]

# இன்றைய வைபவம்

யாழ்ப்பாணம், பெப் 26

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் யாழ் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் தைசல் வகுப்பும், "நாமலிகித ஜெப யக்ஞப்" ஆரம்ப விழாவும் இடம் பெறும்.

சிவானந்த மாதர் சங்கத்தினால் நடத்தப்படும் இவ்விழாவில் யாழ் திவ்விய ஜீவன சங்க செயலாளர் அமரர் இ. வைத்திலிங்கம் நினைவாக நடத்தப்படும் சைவசமய போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

இவ்விழாவில் சுவாமி சிறிவானந்தாவின் அருள் உரையும் இடம் பெறும். (இ)

# மத்திய கட்டுப்பாட்டு நிலையம்

கொழும்பு, பெப். 26

நாடு முழுவதிலும் உள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளில் ஏற்படும் அவசிய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய இரவு பகலாக இயங்கும் மத்திய கட்டுப்பாட்டு நிலையம் ஒன்று கொழும்பில் சுகாதார அமைச்சில் நிறுவப்படும்.

சுகாதாரம் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத் இத்தைத் தெரிவித்தார். [இ-எ]

# கேள்வி அறிவித்தல்

## பிரதேச கல்வித்திணைக்களம் நல்லூர் யாழ்ப்பாணம்

### ஆசிய அபிவிருத்தி வங்கி கல்விப் புனருத்தாபனத் திட்டத்தின் கீழ்

### யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளின் கட்டிட வேலைகள்

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் யாழ் பிரதேச கல்வித்திணைக்கள கேள்விச் சபைத் தலைவரால் 1989 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14ஆம் திகதி (14-03-1989) முற்பகல் 10. 00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைக்கும் அதன் எதிரேயுள்ள தொகைக்கு அல்லது அதனிலும் கூடிய தொகைக்கு கட்டிட வேலை செய்வதற்கென கல்வித்திணைக்களம். கட்டுவேலைத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கட்டிடத்திணைக்களம் ஆகிய ஏதாவதொரு திணைக்களத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்களுக்கு 1989 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் திகதி பிற்பகல் 2 00மணி வரை (10 03-1989) மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணமாக ரூபா ஐம்பதும் (50) மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா இருநூற்றி ஐம்பதும் (ரூ 250/-) செலுத்தியதன் பேரில் கேள்விப்பத்திரங்கள் யாழ் கல்வித்திணைக்களத்தில் வழங்கப்படும். கேள்விப்பத்திரப்பணம் கேள்விவைப்புப்பணம் ஆகியன வங்கிக் கட்டளையாகவோ அல்லது காசுக்கட்டளையாகவோ செலுத்தப்பட வேண்டும் கேள்விகள் 1989 மார்ச் மாதம் 14 ஆம் திகதி (14-03-1989) காலை 10 30 மணிக்கு யாழ் கல்வி திணைக்களத்தில் திறக்கப்படும். அச்சமயம் கேள்விக்காரர் சமூகம் அளிக்கலாம்.

தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் அதுபற்றி அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் ஒப்பந்தம் கைச்சாத்திடல் வேண்டும். தவறின் மறு அறிவித்தலின்றி தெரிவு இரத்துச்செய்யப்படும்.

மேலதிக விபரங்களை யாழ் பிரதேச கல்வித் திணைக்களத்தில் கட்டிடப் பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வெ. சபாநாயகம்
பிரதேச கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

பிரதேச கல்வித்திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
89. 02. 23.

| பாடசாலையின் பெயர் | வேலை விபரணம் | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை |
|---|---|---|
| 01. யா/ வசாவிளான் ம. ம. வி. விசாவிளான். | உணவு விடுதி | ரூ 1, 500, 000/- |
| 02. யா/ வசாவிளான் ம. ம. வி. வசாவிளான். | சாப்பாட்டு மண்டபம் | ரூ 700, 000/- |
| 03. யா/ சித்தி விநாயகர் வித்தி. பருத்தித்துறை. | மாடிக் கட்டிடம் 130' × 25' | ரூ 1, 600, 000/- |

[C/1708]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கேதீச்சரத்தில்

# அன்னதானம் - தாகசாந்தி வழங்குவதற்கு ஏற்பாடுகள்

## மகா சிவராத்திரியை முன்னிட்டு

யாழ்ப்பாணம் பெப் 26

அடுத்த மாதம் 6ஆம் திகதி நிகழவுள்ள மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு திருக்கேதீச்சர ஆலயத்தில் பக்தர்களை வரவேற்று அன்னமுது வழங்க ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. வழமைபோல இவ்வாண்டிலும் அன்னதானம் தண்ணீர் பந்தல் சேவை ஆகியவை நடைபெறும்.

ஒவ்வோராண்டிலும் மகா சிவராத்திரி அன்னதானத்துக்கெனச் சேகரிக்கப்பட்ட நிதியில் அன்னதானத்துக்குச் செலவழிக்கப்பட்டது போக எஞ்சியதைக் கொண்டே பகுதி பகுதியாக மகா சிவராத்திரி மடத்துக்கான கட்டடம் அமைக்கப்பட்டது.

இம் மடத்தில் ஒரே சமயத்தில் 2,000 பேர் வரை அமர்ந்து அமுது உண்ணக்கூடிய இரு மண்டபங்கள் உண்டு. அடியார்கள் தங்கியிருக்க அறைகளும் களஞ்சிய அறைகளும் உண்டு.

அண்மைக் காலத்து அசம்பாவிதங்களினால் பாதிப்புற்றுப் புகலிடம் தேடிவரும் மக்களுக்கும் இந்தியாவுக்கு அகதிகளாகச்சென்றுதிரும்பிவந்தவர்களுக்கும்இம் மடம் தற்காலிக வதிவிடமாகப் பயன்பட்டது குறிப்பிடத்தக்கது.

எதிர்காலத் திட்டமாகப் புனித பாலாவிக்கும் தற்போதுள்ள கட்டடங்களுக்கும் இடையே வசதியான ஓர் இடத்தில் பெரும் மண்டபங்களையும் நூறு காப்பறைகளையும் (லொக்கர்) கொண்டதாகப் புதிய கட்டடம் ஒன்று அமைக்கத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. [ச]




Specialists in:
WATCH REPAIRING
Dealers in:
WATCHES & CLOCKS
all kinds of watch & clocks BATTERIES are available
DILKO WATCH WORKS
404½ HOSPITAL Rd, JAFFNA (OPPOSITE BUS STAND)


## 777ஆம் 779ஆம் இலக்கபாதைகளில்:

## பஸ்களை சேவையில் ஈடுபடுத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 26

ஊர்காவற்றுறைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையே 777 ஆம், 779 ஆம்இலக்கப் பாதைகளில் சேவைகள் நிறுத்தப்பட்டதினால் ஊர்காவற்றுறை மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட ஊர்காவற்றுறை மக்கள் வட பிராந்திய பிரதேச முகாமையாளருக்கு கடிதம் அனுப்பி உள்ளனர்.

இல. 777. இல. 779; பஸ்களை மீண்டும் ஓடவிடும்படி அவர்கள் இக் கடிதத்தில் கோரியுள்ளார்கள்.

இ. போ. ச. பஸ்கள் இந்தப் பாதைகளினால் ஓடாததினால் பயணிகள் கூடுதலான பணம் கொடுக்க நேரிடுகின்றது எனவும் நெரிசல்பட்டுப் பயணம் செய்யவேண்டியுள்ளது, எனவும் கடிதத்தில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (க)

## தொழிற்கல்வி பாட நெறிப் பயிற்சிகள்

இதுவரை எந்தப் பயிற்சியும் பெறாத ஆசிரியர்களுக்கு தொழிற்கல்விப் பாடநெறிகள் திட்டத்துக்கமைய பயிற்சிகளை வழங்க தேசிய தொலைக்கல்வி நிறுவனம் முன்வந்துள்ளது.

இப்பயிற்சிகளை பெற விரும்பும் ஆசிரியர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மார்ச் 15ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சி வகுப்புக்கள் விடுமுறை நாட்களிலேயே நடைபெறும்.


NEW SCIENCE ACADEMY
B.M.C முன்பாக JAFFNA
A/L 89
PAPER CLASS
Zoology
By
Mr. பரந்தாமன் B.Sc. (Hons.)
ஆரம்பமாகிவிட்டது
Thu, Fri — 4-00 — 5 30 p. m
A/L 90
ஆரம்பமாகிவிட்டது
குழியவியல்
Sat, Sun — 9-00 — 10-30 a. m.
[C/1703]


## ரூ. 2,500 பெறுவோர் கிராம மக்கள் முன்னிலையில் தெரிவு செய்யப்படுவர்

கொழும்பு, பெப் 25

வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் மாதம் 2,500 ரூபா பெறத்தகுதியுடையவர்கள், கிராம மக்கள் ஒன்றுகூட்டப்பட்டு அவர்கள் முன்னிலையில் பகிரங்கமாகவே தெரிவு செய்யப்படுவர்.

தகுதியுடையவர்கள் ஒரு போதும் இரகசியமான முறையில் தெரிவு செய்யப்படமாட்டார்கள் என்று ஜனாதிபதி பிரேமதாசா 'சுவ்சிரிபாய்' அலுவலகத்தில் நடந்த உயர் அதிகாரிகள் கூட்டத்தில் தெரிவித்தார்.

மக்கள் முன்னிலையில் பகிரங்கமாக தெரிவு நடக்குமானால் தகுதியற்ற எவரேனும் தெரிவு செய்யப்படுவதற்கு இடம் வராது என்றும் ஜனாதிபதி சொன்னார். (இ-எ)

## ஜனாதிபதி தேர்தல்மனு 18ஆம் திகதி விசாரணை

### ஐந்து நீதியரசர்கள் முன்னிலையில்

கொழும்பு, பெப் 26

ஜனாதிபதித் தேர்தல் ஆட்சேபனை மனு மீதான விசாரணை வருகிற மாதம் 18 ஆம் திகதி ஆரம்பமாகும் என்று பிரதம நீதியரசர் பரிந்தா ரணசிங்கா அறிவித்திருக்கிறார்.

இதனிடையில் ஜனாதிபதி பிரேமதாஸா, தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டீ. சில்வா ஆகியோர் சார்பில் இம்மனு மீதான ஆட்சேபனைகளை சமர்ப்பிக்க இம் மாதம் 28ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இத் தேர்தல் ஆட்சேப மனு பிரதம நீதியரசர் பரிந்தா ரணசிங்கா முன்னிலையில் நேற்று மூன்தினம் விசாரணைக்கு வந்தபோது இந்தத் திகதிகள் அறிவிக்கப்பட்டன.

மனுதாரர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி திரு எச். எல். டி. சில்வா, விசாரணைத் திகதிக்கு மூன்பதாக சாட்சிகள் பட்டியலைச் சமர்ப்பிப்பதாக உறுதியளித்தார்.

மனுவை விசாரிக்க பிரதம நீதியரசர் தலைமையில் இன்னும் 4 நீதியரசர்கள் நியமிக்கப்படவுள்ளனர். (உ-எ)

## சேவை நலன் பாராட்டு விழா

பச்சிலைப்பள்ளி பெப் 26

சாவகச்சேரி நகரசபை மின்சாரப் பகுதியில் தொழில்நுட்ப உத்தியோகத்தராக கடமையாற்றி இளைப்பாறிய எஸ், பாக்கியநாதனுக்கு நகரசபை நலன்புரிச் சங்கத்தினால் சேவை நலன் பாராட்டு விழா நடத்தப்பட்டது.

சங்கத் தலைவர் த. நவரத்தினராசா தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் நகரசபை நிர்வாக உத்தியோகத்தர் ஆ. க. தருமநாதன் மின் அத்தியட்சகர் க. சிவபாதசுந்தரம் மின் முகாமி எஸ் சிவரட்ணசிங்கம் க. யோகநாதன் உட்படபலர் உரையாற்றினர். (இ-1)


உங்கள் குழந்தைகளின்
எதிர்காலத்தை வளமாக்க
உழைக்கும்போதே சிறுகச்சிறுகச் சேமியுங்கள்...
சேமிப்புக்கு வழிகாட்டி
★ ஷப்ரு ★
மாதாந்த சேமிப்பு உயர் வட்டியுடன்
உங்கள் கைகளுக்குக் கிடைக்க "ஷப்ரு"வை நாடுங்கள்.
மாதாந்தம் ரூபா 500/- சேமித்தால்
36 மாதங்களில் ரூ 23216/35 கிடைக்கும்
மாதந்தோறும் 100 ரூபாவின் மடங்குகளாக
12, 24, 36 மாதங்களுக்குச் சேமிக்க முடியும்.
மேலதிக விபரங்களை எமது அலுவலகத்திற்கு நேரில் வந்தோ அல்லது கீழேயுள்ள கூப்பனை நிரப்பி அனுப்புவதன் மூலமோ பெற்றுக்கொள்ளலாம்.
ஷப்ரு யுனிக்கோ பினன்ஸ் லிமிட்டெட்
61, நியூ புல்லர்ஸ் வீதி, கொழும்பு-4.
207, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தங்களின் மாதாந்த சேமிப்புத் திட்டம்பற்றி மேலதிக தகவல்களை தயவுசெய்து அனுப்பும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

பெயர் :..............................
விலாசம் :..............................
தொழில் :..............................

C/5163)
கையொப்பம்



சாக்கு விற்பனைக்கு

சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கத்தில் 3 400 வெற்றுச் சாக்குகளை விற்பனை செய்வதற்குக் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கொள்வனவு செய்ய விரும்புவோர். சங்கத்தில் வைப்புப் பணம் ரூபா 300/- ம் கேள்விப்பத்திரப் பணம் ரூபா 12/50 ம் செலுத்திப் பெற்ற கேள்விப்பத்திரங்களில் மெழுகு முத்திரையிட்ட கடித உறையில் 'சாக்கு கேள்விப் பத்திரம்' என எழுதி 27-2-1989 திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாகச் சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பொதுமுகாமையாளர்.
சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்
சாவகச்சேரி,
23-2-1989
(1696)



FORTUNA ENTERPRISES
[Labour Licence No. 79]
Immediate Vacancies in Kuwait
உடனடி
வேலைவாய்ப்புக்கள் (குவைத்)
★ குவைத்
(1) Airport and Hospital Cleaners - 250
விமானநிலைய, ஆஸ்பத்திரி சுத்திகரிப்பாளர்
சம்பளம்: 30 KD
3 வருட ஒப்பந்தம்
(மேலதிகநேரவேலை திட்டப்படுத்தப்பட்டுள்ளது)
அத்துடன் இருப்பிட வசதி
28 - 02 - 89 க்கு முன்
7 போட்டோக்களுடனும்
பாஸ்போர்டுடனும் விண்ணப்பித்தால்
30-03 89 இல் பிரயாணமாகலாம்.
(2) Heavy Vehicle Drivers - 50
கனரக வாகன சாரதிகள்
சம்பளம்: 60 KD
(3) Light Vehicle Drivers - 50
சாதாரண வாகன சாரதிகள்
சம்பளம்: 45 KD
(4) கமக்காரர் (Farmers) - 60
சம்பளம் பற்றிய விபரம்
நேரில் அறிந்துகொள்ளவும்.
நாடவேண்டிய முகவரி:
யாழ்ப்பாணப் பிரதிநிதி
இ. விஸ்வேஸ்வரா/யன்
3ஆம் கட்டை லேன்,
கே. கே. எஸ். வீதி,
கொக்குவில்.
[C-1686]


# உடல்வலு இருந்தால்தான் கல்வியிலும் முன்னேறலாம்

## ஜோர்ஜ் விளையாட்டரங்கை திறந்து வைத்து உரை

யாழ்ப்பாணம், பெப் 26

'விளையாட்டுத்துறை கல்வியைப் போல முக்கியமானது. உடல் வலு இருந்தால் தான் கல்வியிலும் முன்னேறலாம். துரதிருஷ்டவசமாக இன்று யாழ்ப்பாணத்தில் மாணவர்கள் உடல் வலுவைப் பற்றியோ ஆரோக்கியத்தைப் பற்றியோ கவனிப்பதில்லை.

யாழ்ப்பாணக் கல்லூரியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள ஜோர்ஜ் விளையாட்டு அரங்கை (George Gymnasium) திறந்து வைத்துப் பேசிய கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு ஏ. கதிர்காமர் மேற்கண்டவாறு கூறினார்.

விளையாட்டு அரங்கின் திறப்பு வைபவம் 23 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற்றது கல்லூரி அதிபர் கலாநிதி எஸ். ஜெபநேசன் வைபவத்தில் வரவேற்புரை நிகழ்த்தினார்.

திரு ஏ கதிர்காமர் மேலும் பேசுகையில், "இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் மலையாளத்தைச் சேர்ந்த கலை, விஞ்ஞானப் பட்டதாரிகள் இங்கு வந்து யாழ்ப்பாணத்தின் கல்வியின் வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றினார்கள்.

அவர்கள் கல்வி ஒழுக்கம், உடல் பயிற்சி ஆகிய யாவற்றிலும் சிறந்து விளங்கி பூரண மனிதர்களாக அமைந்தார்கள்" என்றார்.

யாழ்ப்பாணக் கல்லூரி ஆளுநர் சபை உறுப்பினர்கள் உட்படப் பலர் கலந்து கொண்ட இந்த விழாவில் ஆசிரியர்கள் எம். டி. தம்பிராஜா, வி. செல்வரத்தினம் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்தவரும் விளையாட்டுத்துறையின் வளர்ச்சிக்குப் பல சேவைகள் புரிந்தவருமான கே. பி. ஜோர்ஜ் நினைவாகவும் அவருடைய குடும்பத்தின் நினைவாகவும் இந்த விளையாட்டரங்கு அமைகப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது [க]

## விட்டமின் "ஏ" சத்துகுறைவால் குழந்தைகள் பார்வை இழக்கும் ஆபத்து

கொழும்பு, பெப் 26

விட்டமின் ஏ சத்துக் குறைவினால் நமது நாட்டில் குழந்தைகள் பலர் கண்பார்வையை இழக்கும் அபாயம் ஏற்பட்டிருப்பதாக உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்து இருக்கிறது.

இலங்கையில் உலகச் சுகாதார ஸ்தாபனம் நடத்திய ஆய்வு ஒன்றில் இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

தாய்ப்பால் கொடுப்பதைக் குறைத்துக் குழந்தைகளுக்குத் தாய்ப்பால் ஊட்டுவதை நிறுத்துவதும் குழந்தைகள் பார்வை இழப்பதற்கு இன்னொரு காரணம் என்றும் இந்த ஆய்வின் தெரியவந்திருக்கிறது. (இ-எ)

## ஆத்ம சாதனை

திருநெல்வேலி இராமநாதன் வீதியில்இருக்கும் பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவை சமித்தி மண்டபத்தில் இன்று 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் தினமும் காலை 6-30 மணி தொடக்கம் 7-30 மணி வரை தொடர்ந்து 20 நாட்கள் ஆத்ம சாதனை நடைபெறும் (க)


உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பினைப்
பெறுவதற்கான கம்பியூட்டர் கல்வி
★ COMPUTER PROGRAMMING AND DATA PROCESSING IN BASIC LANGUAGE
பயிற்சிக் காலம். 2 மாதம் ஆரம்பம்: 3-3-89
(திங்கள், புதன், வெள்ளி வகுப்புகள்)
கட்டணம்: ரூபா 950/- (இரு பிரிவுகளாகச் செலுத்தலாம்)
O/L படித்த இருபாலாரும் சேரலாம். குளிரூட்டப்பட்ட அறையில் கூடிய நேர செய்முறைப் பயிற்சி (I. B. M COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
குறிக்கப்பட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்க்கப்படுவார்கள் ஆகையால் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பதிவு செய்யவும்.
விண்ணப்ப முடிவு நாள்: 2 - 3 - 89.


UNIKCO COMPUTER CENTRE
No. 5, மின்சாரநிலைய வீதி,
2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(உப தபாற்கந்தோர், அருகாமை)
(C 1661)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தில்லையம்பலம் துரைராஜா
(இலங்கை மின்சாரசபை)

தோற்றம்:- 15 - 06 - 1930    மறைவு:- 15 - 02 - 1979

திதி: 26.02 1989

குடும்பத்தின் ஒளி விளக்கே! பத்தாண்டு மறைந்தாலும் அன்புருவம் மறையவில்லை. உங்கள் நினைவு இல்லாநாளில்லை! எம் துயர் ஆருதப்பா.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்

புளியடிச் சந்தை.
மானிப்பாய் தெற்கு.    (9533)

## காயம் அடைந்த தம்பதியர்

வடமராட்சி, பெப் 26

சடந்த திங்கட்கிழமை நெல்லியடியில் இடம் பெற்ற தாக்குதல் சம்வத்தில் காயம் அடைந்தோரில் ஒரு கணவனும் மனைவியும் அடங்குவர்.

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது இவர்கள் காயம் அடைந்தனர்.

அல்வாய் தெற்கைச் சேர்ந்த சரவணமுத்து செல்வநாயகம் (வயது 57) அவரது மனைவி செ. அரியமலர் (வயது 50) ஆகியோரே இந்த இருவரும் ஆவர்.

புலோலி மந்திகை ஆதார வைத்திய சாலையில் இவர்கள் சேர்க்கப் பட்டனர். (இ-160)

## புதிய சனசமூக நிலையம்

யாழ்ப்பாணம், பெப். 26

கொழும்புத் துறை வளர்புரததில் புதிய சனசமூக நிலையம் ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. வளர் புரஐக்கிய சனசமூக நிலையம் என வழங்கவிருக்கும் இதற்கான ஆரம்பக்கட்ட வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

மார்ச் 19 ஆம் திகதி இந் நிலையத்தை திறந்து வைப்பதற்கான நடவடிக்கைகளை நிர்வாகத்தினர் கவனித்து வருகின்றனர். (ஒ)

## வழக்குநர்களைப் பதிவு செய்தல்

### பச்சிலைப்பள்ளி பிரதேச சபை. பளை

1989 ஆம் ஆண்டுக்கு கீழ்க்காணும் பொருட்களை வழங்குவதற்கான விண்ணப்பங்கள் பதிவு செய்வதாக வியாபார ஸ்தாபனங்களிடமிருந்து 1989 - 03 - 09 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை விசேட ஆணையாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை என்ற பெயருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

| பொருட்கள்/சேவைகள் | | பதிவுக்கட்டணம் |
|---|---|---|
| 01. காகிதாதிகள் | — | 50. 00 |
| 02. சுகாதார சேவைக்கான பொருட்கள் | — | 50. 00 |
| 03. அச்சிட்டபடிவங்கள்/ பதிவேடுகள் | — | 50. 00 |
| 04. மின்சாரப் பொருட்கள் | — | 50. 00 |
| 05. சீருடை துணிகள் / சப்பாத்துக்கள் | — | 50. 00 |
| 06. ஆயுர்வேத மருந்துகள் | — | 50. 00 |

மேலதிக விபரங்களுக்கு இச்சபையுடன் தொடர்பு கொள்ளவும்.

சு, கந்தசாமி
விசேட ஆணையாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,
பளை.

(C/1697)

## இலங்கைப் பல்கலைக் கழகங்களின் வெளிவாரி பட்டமாணிப் பரீட்சைகள் கல்வியாண்டு 89\90

### விசேட அறிவித்தல்

விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

B. A, B. Com ஆகிய பாடநெறிகளுக்கு பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் மார்ச் 4 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தி அடைந்தவர்கள் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் மேற் குறிப்பிட்ட பாட நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

* 2 ஆம் பிரிவிற்கான பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்: 04 - 03 - 89

* G. A. Q. சித்தியடைந்த மாணவர்களுக்கான B. A. வகுப்புகளும் மார்ச் மாதம் 4 ஆம் திகதி ஆரம்பமாகின்றன.

பேராதனை, ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகங்களில் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவங்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

பதிவுகள் அனைத்தும் நிறுவனத்தினுல் செய்து தரப்படும்.

பதிவாளர்

**ASTAN INSTITUTE**

166/1 Hospital Road, Jaffna.
(A.S சங்கரப்பிள்ளை கட்டிடம் 1ஆம் மாடி)

(C/1680)

## LML Vespa.T5

அடுத்த தொகுதி ஸ்கூட்டர்கள் பத்து நாட்களில் வர இருப்பதால் முற்பணம் செலுத்தி உங்கள் பெயரை பதிவு செய்து கொள்ளுங்கள்.

V. K. இராசரத்தினம்,
L M L யாழ் மாவட்ட
விற்பனையாளர்,
65, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/1700

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி



கணநாதன் குணநாதன் (இன்சூர்)

மலர்வு: 03. 02. 1965    உதிர்வு: 26. 11. 1988

மக்களுக்காய், அவர்தம் விடுதலைக்காய்
வீரத்தின் பிறப்பிடமாய் உன்னுயிரை,
வளமான வாழ்வை ஆகுதியிட்ட இன்சூரே!
களங்கள் பலகண்டு கலங்காத உன் உள்ளம்
உள்ளவரை எம் நினைவை விட்டு அகலாதே.
என்றுமே நீ எங்கள் இதயதீபமடா!
மக்கள் நலன் நாடிய தியாகத்தீபமடா!

ஆற்றுது அஞ்சலிகள் செலுத்தும்
குடும்பத்தினர்,
நண்பர்கள்.

'குமரபதி'
சிவன்கோவிலடி,
வட்டுக்கோட்டை.

(9548)

## 41 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் - 22. 08 - 1924

●●●

விண்ணில் - 6 - 01 - 1989



அமரர் திரு. J.K. இராஜேந்திரம்
Retd Tea maker Obatha Estate)

மண்ணிலே பிறந்தவர்கள் இறப்பது திண்ணமே!
எண்ணிலா பெருமைகள் உமை வந்தடையும் வேளையிலே!
விண்ணிலே வாழ்வதற்கு விரைந்து விட்டீரே!
கண்ணிலே நீர் மல்கக் கலங்குகின்றோம் நாங்கள்.

மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சங்குவேலி வடக்கு.
மானிப்பாய்.    (9569)

## VACANCY

### வெளிநாட்டு வேலைவாய்ப்பு

உடனடி வேலைவாய்ப்பு

### 1. சவூதி அரேபியா

**Saudi-Operation & Maintance Company**

| | | Nos | |
|---|---|---|---|
| (1) | Tyreman | 01 | 550 SR + 125 FA |
| (2) | Sheet Metalworker | 01 | 550 SR + 125 FA |
| (3) | Fuel Injection Calibdralion Mechanic | 01 | 700 + 125 FA |
| (4) | Auto Electrician | 02 | 550 + 125 FA |
| (5) | Lockshith | 01 | 550 + 125 FA |
| (6) | Panel Beater | 01 | 625 + 125 FA |
| (7) | Painter Spray | 02 | 550 + 125 FA |
| (8) | Electrician | 04 | 775 + 125 FA |
| (9) | Sewage Pipe Plumber | 02 | 700 + 125 |
| (10) | Sewage Pipe Fitter | 02 | 700 + 125 |
| (11) | Sewage Water | 02 | 700 + 125 |
| (12) | Painter | — | 550 + 125 |
| (13) | Road Painter | — | 550 + 125 |
| (14) | Furniture Polisher | — | 550 + 125 |
| (15) | Foreman (Cleaning Services) | — | 485 + 125 |
| (16) | Pest Control | — | 700 + 125 |
| (17) | Radio Operator | 3 | 750 + 125 |
| (18) | Mason | — | 600 + 125 FA |
| (19) | Carpenter | — | 600 + 125 FA |

வயதெல்லை: 21 முதல் 47 வரை
ஐந்து வருட அனுபவச் சான்றிதழ் வேண்டும்
நேர்முகப்பரீட்சை. 01 - 03 - 89 — 05 - 03 - 89 வரை
நேர்முகப் பரீட்சை கொழும்பில் நடைபெறும்.

**15-03-1989க்குள் போவதற்கு முடியும்**

### 2. Taiwan - தைவான்

வயது 18 முதல் 30 வரை. ஆங்கில அறிவு வேண்டும்

### 3. Beirut - பெய்ரூட்

வயது 18 முதல் 40 வரை

### 4. Kuwait - குவைற்

| | | | |
|---|---|---|---|
| 1. | Cleaners | 35 KD | No Food |
| 2. | Driver (Heavy) | 50 KD | With Kuwait or Gulf Licence. |
| 3. | Driver (House) | 40 KD | |

### Kuwait

| | | | |
|---|---|---|---|
| 1. | Bulldozer Operator / புல்டோசர் ஒப்பறேற்றர் | 5 — | 90 K D |
| 2. | Tiper Truck Driver / ரிப்பர் றக் ஏறவர் | 5 — | 85 K D |
| 3. | Dumper / Loader Operator / டம்பர் / லோடர் ஒப்பறேற்றர் | 5 — | 90 K D |
| 4. | Divers (சுழியோடிகள்) | 30 — | 70 K D |
| 5. | Heavy Equp Mech (Diesel) / கனரக வாகன மெக்கானிக் (டீசல்) | 1 — | 5 K D |
| 6. | Asst. Mech (Deisel) / உதவி மெக்கானிக் (டீசல்) | 4 — | 75 K D |
| 7. | Marine Supervisor Caple of under Worker Civil Worker / மராயன் மேற்பார்வையாளர் கீழ் தள வேலையாளர் | 1 — | 125 K D |
| 8. | Black Smith (Door / Winders) | 3 — | 85 K D |
| 9. | Merudez Benz Mechanic / பென்ஸ் கார் திருத்துபவர் | 1 — | 85 K D |
| 10. | Steel Fabricator | 3 — | 85 K D |
| 11. | Welders (Arc / Oxy) | 2 — | 85 K D |
| 12. | Hydrulic Mechanic H V. Y. Duty | 2 — | 85 K D |
| 13. | Mechanical Engineer Draughtmen | 1 — | 230 K D |
| 14. | Car Electrician | 1 — | 85 K D |

வயது: 20 — 45 வரை. 5 வருட அனுபவச் சான்றிதழுடன், பாஸ்போட், 3 படம் என்பவற்றுடன் எம்முடன் உடன் தொடர்பு கொள்ளவும்

### 5. House maid Kuwait & Saudi

Cleaners - Female

ஆகிய வெற்றிடங்களுக்கு ஆட்கள் தேவை தொடர்பு கொள்ள விரும்புபவர்கள் பின்வரும் முகவரியில் எம்முடன் தொடர்பு கொள்ளவும்

**T. V. TRAVELS,**

BROWN ROAD, KOKUVIL.

Branch:-

1. K. NAVARATNAM, 19, Sivan Pannai Road, Koddady, Jaffna.
2. KARALASINGAM (Yappan), No, 25, Karaikaddu Lane, Vannarpannai, Jaffna.
3. S. KUGANANTHARAJAH, Thanneerottu, Mulliyawalai.

(C/1684)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்று புகழ் மிக்க எழுதுமட்டுவாள் சந்தை:

## மீண்டும் இயங்க வைக்க வாய்ப்புகள்

பேராசிரியர்
**போ. பாலசுந்தரம்பிள்ளை**
(யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள சந்தை நிலையங்களுள் எழுதுமட்டுவாள் ஒன்றுமே இச்சந்தை நீண்ட வரலாற்றைக் கொண்டிருப்பதை அறிய முடிகின்றது. 17ஆம் நூற்றாண்டில் பிலிப்போல்டே யினால் இலங்கை பற்றிஎழுதப்பட்ட நூலில் இச்சந்தையின் முக்கியத்துவம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு சிறப்புப்பெற்றிருந்த சந்தை கடந்த சில காலமாக நலிவுற்று இப்பொழுது முற்றாகச் செயற்படாத நிலையில் காணப்படுகின்றது. இச்சந்தையை மீள விருத்தியாக்கமுடியுமா? அதற்குரிய வாய்ப்புகள் உண்டா? இச்சந்தையை மீள விருத்தியாக்குவதற்குரிய உள்ளார்ந்த வளம் இருக்கின்றது. இந்நிலையத்தை ஒரு சிறியசேவை நிலையமாகவும் விருத்தியாக்கலாம்

யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி ரோட்டில் பிரயாணம் செய்யும் ஒருவர் குடாநாட்டுக்குள் சராசரி 5 மைல் இடைவெளிகளில் சேவை நிலையங்கள் வளர்ச்சிபெற்றிருப்பதனைக் காணலாம். இந்நிலையங்கள் திட்டமிடப்படாதஇயற்கையாகவே விருத்தியானவையாம். கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம், எழுதுமட்டுவாள், பளை, இயக்கச்சி ஆகியன முக்கிய சேவை நிலையங்களாகவும், சந்தை கூடுமிடங்களாகவும் இருக்கின்றன. இவற்றுள் எழுதுமட்டுவாள் முன்னர் வகித்த நிலையிலும் பார்க்க இன்று குறைவான தரத்திலேயே உள்ளது. எழுதுமட்டுவாளின் வளர்ச்சிக் குறைவுக்கு பல ஏதுக்கள் காரணமாக இருந்தன. இதனைச் சூழவுள்ள கிராமங்களின்வளர்ச்சி குறைவாக இருந்தது. எழுதுமட்டுவாளில் சில வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட சமூகப்பிரச்சினை, அண்மைக்காலத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள், மற்றும் கொடிகாமம், பளை, சாவகச்சேரி நிலையங்களின் தாக்கம் என்பனவற்றுல் இச்சந்தை நடவடிக்கைகள் பெரிதும் நலிவடைந்தன.

### இன்றைய நலிவான நிலைமை

இச்சந்தை மிக வசதியான இடப்பரப்பில் அமைந்தும் இரண்டு பெரிய சந்தை கட்டிடங்களையும் கொண்டும் உள்ளது. இவற்றுள் ஒன்று தற்பொழுது பிரிக்கப்பட்டும், மற்றது கவனிப்பாரற்று அழிவுக்குட்பட்டும் காணப்படுகிறது. இயற்கையான பெரிய ஆல மரநிழல் வசதிகளையும் கொண்டுள்ளது. இங்கு காணப்படும் வசதிகள் வீணே அழிந்து போவது நல்லதல்ல. இந்தச் சந்தையை மீளவும் விருத்தியாக்கி உள்ளூர் உற்பத்தியாளர்களும், நுகர்வோரும், குடாநாட்டு வியாபாரிகளும் சந்தித்துக்கொள்ளும் இடமாக மீண்டும் மாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும். இப்பிரதேசத்து உற்பத்திப் பொருள்களான தேங்காய், புகையிலை, பழவகைகள், சிறிதளவு காய்கறிவகைகள், கோழி, பனை உற்பத்திப் பொருட்கள் என்பன இச் சந்தையில் விற்கப்படுவது வழக்கம். இச்சந்தை புகையிலை, பழ உற்பத்திக் காலங்களில் சுறுசுறுப்பாக இயங்கியது. வடமராட்சி கிழக்கு பகுதியிலிருந்தும், இளாலியிலிருந்தும் மீனும் இச்சந்தைக்கு கொண்டுவரப்படுவது வழக்கம் உள்ளூர் மக்களுக்குத் தேவையான நுகர்வுப் பொருள்கள் விற்பனையும் முக்கியத்துவம் பெற்றிருந்தது இச்சந்தை முன்னர் வெள்ளிக்கிழமைகளில் முக்கியமாகவும், குறிப்பாக யூன், யூலை, ஓகஸ்ற் மாதங்களில் சிறப்பாகவும் செயற்பட்டது.

### விருத்தி வழிமுறைகள்

இச்சந்தையைவிருத்தியாக்குவதற்கு இச்சந்தையை சிறிய சேவை நிலையமாக விருத்தி செய்ய வேண்டும். ஒன்றின் வளர்ச்சியை மற்றதுடன் தொடர்பு படுத்துவதன் மூலம் இரண்டு செயற்பாடுகள் வளர்ச்சி பெறும் இவ்விடத்தை சிறுசேவை நிலையமாகவிருத்தியாக்குவதன் மூலம் எழுதுமட்டுவாள், முகமாலை, சரம்பகம், விடத்தற்பளை, உசன், மிருசுவில் ஆகிய கிராமங்களுக்குத் தேவையான கீழ்மட்ட பொருள்களையும், சேவைகளையும் அளிக்கமுடியும். மேற்குறிப்பிட்ட கிராமங்கள் அடங்கும் பிரதேசத்தில் 15,000 மக்கள் வரை வாழ்கின்றனர். இச்சேவை நிலையத்தின் வளர்ச்சி, இப்பிரதேசத்தில் விவசாயக் கைத்தொழில் நடவடிக்கைகளுக்கே உதவியாக அமையும் இப்பிரதேச கிராமங்களில் பயிர்ச்செய்கை சிறியளவாக மேற்கொள்ளப்படுவதாலும் வீட்டுத்தோட்டங்களிலிருந்து விவசாய பொருள்கள் கிடைப்பதாலும் இவைகளை விற்பனை செய்வதற்கு சிறந்த சந்தையிருப்பது அவசியமாகும். மேலும் இது கிராமங்களில் சமூக-பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான பொருள்களையும், சேவைகளையும் வழங்கும் நிலையமாகவும் விளங்கும். இந்நிலையில் எழுதுமட்டுவாள், சேவைநிலையத்தின் வளர்ச்சி தென்மராட்சி தென் கிழக்குப் பகுதியினதும், முகமாலை பகுதியினது வளர்ச்சிக்கும் வழிகோலும். குடாநாட்டுக்குள் தெற்கு நோக்கிய இடஞ்சார்பு வளர்ச்சி தேவையான தொன்றாகும் இவ்வளர்ச்சியை இச்சேவை நிலையத்தை விருத்தி செய்வதன் மூலம் துரிதப்படுத்தலாம்

### மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்

சந்தையும் சேவை நிலையமுமாக விளங்கக்கூடிய எழுதுமட்டுவாளின் வளர்ச்சிக்குப் பின்வரும் திறமுறைகளை மேற்கொள்ளலாம்.

எழுதுமட்டுவாள் சந்தை சாவகச்சேரி பிரதேச சபையின்கீழ் உள்ளது. இப்பிரதேச சபை இச் சந்தையினை மீள நன்முறையில் செயல்படவைக்கத் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். யாழ்ப்பாணக் குடாநாட்டுச் சந்தை வியாபாரிகளின் வாராந்தச் சுற்றுப்பயணத்தில் எழுதுமட்டுவாளும் இடம்பெற வேண்டும். தென்மராட்சி சந்தை வியாபாரிகள் சிலர் திங்கள், புதன், வெள்ளி கொடிகாமம் சந்தைக்கும்; செவ்வாய், வியாழன், சனி சாவகச்சேரி சந்தைக்கும் செல்வது உண்டு. சில வியாபாரிகள் வாராந்தச் சுற்றில் குடாநாட்டின் மூன்று நான்கு சந்தைகளுக்கும் செல்வதுண்டு. ஆகவே குடாநாட்டுச் சந்தை வியாபாரிகளின் கிழமைச் சுற்றில் கிழமையில் ஒரு நாளாவது ஒரு பகுதியினர் எழுதுமட்டுவாளுக்கு வரக்கூடிய முறையில் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளின் சந்தையைப் புனர்நிர்மாணம் செய்யலாம். கொடிகாமத்துக்கும் பளைக்குமிடையில் இரண்டிலும் பார்க்கக் குறைந்த மட்டத்திலான சேவை நிலையமாக எழுதுமட்டுவாளை விருத்தியாக்க வேண்டும். இதன்மூலம் ஒன்றுடன் ஒன்று போட்டியாக வளராது ஒன்றுடன் ஒன்று இணைந்து வளர வாய்ப்பேற்படும். இத்த நிலைப்பாட்டை முன்னெடுக்கக்கூடிய முறையில் இடஞ்சார்பு அபிவிருத்தி நடவடிக்கைகள் எழுதுமட்டுவாள் பகுதியில் இடம்பெற வேண்டும். எழுதுமட்டுவாள் சந்தியை அண்டிய பகுதியில் இப்பிரதேசத்தின் சேவை தொடர்பான அரச, கூட்டுறவுத்துறை நிறுவனங்கள் இடவமைவு பெறவேண்டும். எழுதுமட்டுவாள்-நாகர் கோயில்வீதி விருத்தியாக்கப்பட்டு வடமராட்சி கிழக்கை குறிப்பாக நாகர்கோயில் பகுதியை எழுதுமட்டுவாளுடன் இணைப்பதன் மூலம் இதனது பின்னணிப் பகுதியை விஸ்தரிக்க முடியும். மேலும் இவ்விணைப்பு வடமராட்சி கிழக்குப் பகுதியின் வளர்ச்சிக்கும் வழிவகுக்கும். எழுதுமட்டுவாள் புகையிரத நிலையம் கொடிகாமத்திற்கும் - பளைக்குமிடையில் அமைந்திருப்பதால் அதனை விருத்தியாக்க வேண்டும். இந்நிலையம் தபால், உள்ளூர் புகையிரதங்கள் நிற்பாட்டுப்படும் இடமாக இருந்து வந்தது இச்சந்தையின் செயற்பாட்டிற்கு உதவியாக இருந்தது. 1983 க்குப் பின்னர் இவ்வசதியை எழுதுமட்டுவாள் இழந்துவிட்டது. புகையிரத சேவை விருத்தியாக்கப்படுமிடத்து இப்பகுதி மக்களின் போக்குவரத்துக்கு ஏற்ற சிறிய தரமான புகையிரத நிலையமாக இது மாற்றப்படவேண்டும்.

மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமிடத்து எழுதுமட்டுவாளை ஒரு சிறிய சேவை நிலையமாக விருத்தியாக்க முடியும். கொடிகாமத்திற்கும் -பளைக்கும் இடையில் ஒரு முக்கிய சேவை நிலையமாக இது வளர இடமுண்டு. இதன் மூலம் இதன் அயற்பகுதிகள் வளர்ச்சி பெற வாய்ப்பு ஏற்படும். ★

---

# எழுத்தாளன் கற்பனையால் எழுந்த பூகம்பம்

ஒரு எழுத்தாளனைக் கொல்பவருக்கு 10 லட்சம் அமெரிக்க டாலர் வெகுமதி! கொல்பவர் ஒரு ஈரானிய முஸ்லிமாக இருந்தால் 30 லட்சம் அமெரிக்க டாலர் வெகுமதி!

இப்படி ஒரு நாட்டின் அரசுத் தலைவர் பகிரங்கமாக அறிவித்திருக்கிறார்.

எழுத்தாளரின் பெயர் சல்மான் றஷ்டி. உலகில் பல்வேறு பிரச்சினைகளை எழுப்பியுள்ள அவருடைய நூலின் பெயர் சாத்தானிய வசனங்கள் (The Satanic Verses) என்பது ஆகும்

பம்பாயில் முஸ்லிமாகப் பிறந்து பிரிட்டனில் வாழும் சல்மான் றஷ்டி இப்பொழுது ஒரு பிரிட்டிஷ் பிரஜை ஆங்கிலத்தில் எழுதிய சர்ச்சைக்குரிய இந்த

### செய்திக்குப் பின்னல்

நூலில் இஸ்லாம் மதத்தை அவதூறு செய்துள்ளார் என்று உலகின் பல நாடுகளையும் சேர்ந்த இஸ்லாமிய மதப் பிரமுகர்கள் குற்றஞ் சாட்டி உள்ளனர்.

'சாத்தானிய வசனங்கள்' என்ற இந்த நூலைப் பற்றி எழுந்துள்ள பிணக்கில் ஈரானுக்கும் பிரிட்டனுக்கும் இடையிலான ராஜதந்திர உறவுகள் பாதிப்படைந்துள்ளன. அதுபோலவே ஈரானுக்கும் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையிலான உறவுகளும் பாதிப்படைந்துள்ளன.

பல நாடுகளில் முஸ்லிம்கள் இந்த நூலுக்கு எதிராக ஆட்சேபனைகள் செய்துள்ளார்கள். பாகிஸ்தானில் இதனை ஒட்டிய ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஐவர் கொல்லப்பட்டனர்.

சில நாடுகளில் இந்நூலை வெளியிட்ட 'பெங்குயின்' நிறுவனத்தின் புத்தகங்களை வரவழைப்பதே நிறுத்தப்பட்டுள்ளது இந்த நூலின் மொழியாக்கம் பல்வேறு நாடுகளில் நிறுத்தப்பட்டுள்ளது எனவும் அறிவிக்கப்படுகிறது.

இவ்வளவு 'அல்லோலகல்லோலப்படுவதற்கு' இந்த நூலில் என்ன இருக்கிறது? ஒரு சிறிய பிரச்சினையைப் பெரும் பிரச்சினையாக்கி விட்டார்கள் என்று ஒரு முஸ்லிம் நாட்டுக் (குவைத்) தலைவர் கூறியுள்ளார்

இந்த நூலுக்கு ஆட்சேபனை தெரிவிப்போரில் எத்தனை பேர் இதனை வாசித்திருப்பார்கள் என்ற வினவுக்குக்கிடைக்கும் விடையும் பலவீனமானதாகவே இருக்கும் என்று சொல்லப்படுகின்றது.

றஷ்டியின் நூல் இஸ்லாம் மதத்தை அவதூறு செய்கின்றது என்ற குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவேண்டும். அப்படி நிரூபிக்கப்பட்டாலும் தன் கருத்தை வெளியிட்ட எழுத்தாளனுக்கு அவரது கருத்து மக்களை பிழையாக வழி நடத்துவது எனத் தக்க நீதிமன்றத்தில் நியாயப்படுத்தப்படின் தண்டனை கூடவழங்கலாம்; ஆனால் மரண தண்டனை என்பது எங்களை எங்கே இழுத்துச் செல்கின்றது? முடிந்து போனதாகக் கருதப்படும் கடந்த கால இருண்ட யுகத்துக்கு அல்லவா?- இவ்வாறு உலகின் பிரபல எழுத்தாளர்களும் எழுத்தாளர் சம்மேளனங்களும் வேதனைக் குரல் எழுப்பி உள்ளன

ஒரு எழுத்தாளனுடைய கற்பனைசக்தி உலகில் பெரும் அரசியல் பூகம்பத்தை கிளர்ந்தெழச் செய்திருப்பது உலகின் அண்மைக்கால வரலாற்றில் முதல் முறையானது என்று கருதப்படுகிறது. (தோடபு: வீயெஸ்)

---

**WANTED**

**Central Nursing Home**

**Wanted Medical Officer for immediate employment.**

Qualification: M. B. B S.

Salary: Negotiable

350, PALALY ROAD,
THIRUNELVELY.

(9380)

---

# நிவாரணம் பெறத் தவறிய

# கொக்குவில் கோண்டாவில் விவசாயிகள்

கொக்குவில் கோண்டாவில் பகுதியில் கணிசமான எண்ணிக்கையினர் விவசாயத்தை நம்பியிருப்பவர்கள்.

உற்பத்தித்திறன் வாய்ந்த தொழில் முயற்சிக்கான நன்கொடைப் பணம் இப்பகுதி விவசாயிகள் பலருக்குப் பல்வேறு காரணங்களுக்காகக் கிடைக்கவில்லை.

இதனால் அவர்கள் ஏமாற்றமும் அதிருப்தியும் அடைந்துள்ளார்கள்

குத்தகைக் காணியில் தம்செலவில் விவசாயம் செய்த சிலர் காணிச் சொந்தக்காரரின் சம்மதக் கடிதம் பெறமுடியாததால் இப்பணத்தைக் கைநழுவவிட வேண்டிஏற்பட்டுள்ளது

இன்னும் சிலர் மணமாகாத இளைஞர்கள் என்ற காரணத்திற்காக இப்பணத்தைப் பெறும் சந்தர்ப்பத்தை இழந்துவிட்டனர்

வேறுசிலர் அரசாங்க ஊழியர்களாக இருக்கும் காரணத்தால்இப்பணத்தைப் பெறும் தகுதியை இழந்துள்ளனர்.

இதுதவிர, இன்னும் பலர் பல்வேறு காரணங்களால் உரிய பத்திரங்களை நிரப்பி ஒப்படைக்க முடியாமல்போனதால் இப்பணத்தைப் பெற முடியாமல் போய்விட்டது

கடந்த 87 அக்டோபர் சம்பவத்தின்போது முதலில் அகதியாகவெளியேறவேண்டிய நிர்ப்பந்தம் கொக்குவில், கோண்டாவில் பகுதி மக்களுக்கே ஏற்பட்டது.

பிறபகுதிகளைச் சேர்

### பிரதேசப் பிரச்சினை

ந்த மக்கள் அகதிகள் முகாம்களிலிருந்து தமது சொந்த இடங்களில் மீளக் குடியேறிய பலவாரங்களின் பின்பே கொக்குவில் பகுதி மக்கள் மீளக்குடியேறமுடிந்தது. இதனால் உரிய காலத்தில் பலரால் உரிய பத்திரங்களை நிரப்பிக் கொடுக்க முடியாமற் போய்விட்டது. அல்லாமலும் குறிப்பிட்ட ஒரு பத்திரத்தை 25 ரூபா செலுத்திப் பெற அப் [illegible] இடம் தராமையாலும் சிலர் பத்திரங்களை நிரப்பிக் கொடுக்க முடியவில்லை

இன்னோரன்ன பல்வேறு காரணங்களால் இவர்கள் தலா 4000 ரூபா நன்கொடைப் பணத்தைப் பெறமுடியாமற் போயுள்ளது.

தமது முதலீட்டில் உருவான தோட்டப் பயிர்கள் பயன்தரும்தறுவாயில் அகதிகளாக முகாம்களுக்குச் சென்று தங்கியிருந்தபோது, தம் சொந்தத் தோட்டத்தில் விளைந்த உணவுப் பொருள்களையேஉயர்ந்த விலைகொடுத்து உயிரைப் பணயம் வைத்துக் கொண்டுவந்தவர்களிடம் வாங்கியுண்டதையும் பல விவசாயிகள் நினைவுபடுத்தினர்.

நாடு செழிப்புறவேண்டும் என்பதற்காகவும். தம் ஓய்வு நேரத்தைப் பயனுள்ள [illegible] வேண்டும் என்பதற்காகவும், தமது சொந்தப் பொருளாதார வளத்தை உயர்த்துவதற்காகவும், தம்அரசாங்க சேவையிலிருந்து வந்த ஊதியத்தை விவசாயத்தில் செலவழித்து அது பயன்தரும் வேளையில அகதியாக வெளியேறிய பகுதிநேர விவசாயம் செய்யும் அரசாங்க ஊழியர்களும் இந்நன்கொடைப் பணம் கிடைக்காமையினால் விரக்தியுற்று உள்ளனர்.

யாழ் மாவட்ட விவசாயிகளின் நிலைமை குதாட்டம் போன்றது. விளைபொருள்களை உரிய விலையில் விற்க முடியாமல் நஷ்டமடைவதும் போக்குவரத்துப் பிரச்சினைகளால் வடக்கிற்கு வெளியே பொருள்களை எடுத்துச் செல்ல முடியாமல்இங்கே விளைபொருள்கள் தேங்கிஎதிர்பார்த்த இலாபத்தை அடைய முடியாமற் போவதும் யாழ் விவசாயிகளின் நிலைமையாகும்.

இந்நிலையில் இப்பகுதி விவசாயிகளுக்குக் கைகொடுத்து அவர்களைத் தூக்கிவிடவேண்டியது புனரமைப்பு வேலைகளில் ஈடுபட்டுள்ள பொது ஸ்தாபனங்களின் கடமையாகும்.

**கொக்குவில் செய்தியாளர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

## வாசகர் நெஞ்சம்

### சர்வதேச விமானத்தளம் தமிழ்ப் பகுதியில் அமையுமா?

தங்கள் 6. 2. 89 'உதயன்' பத்திரிகையில் 'ஹிங்குராங்கொடையில் சர்வதேச விமானத் தளம்'' என்ற தலைப்பில் வெளியாகியுள்ள செய்தியைப் படிக்கும் தமிழ், முஸ்லிம் மக்களின் மனங்களில் மாநிலமான வடக்கு. கிழக்கு இணைந்த பகுதியில் ஏன் இப்படியான ஒரு விமான நிலையம் நிறுவக்கூடாது? என்ற நியாயமான கேள்வி எழும் என்பதில் ஐயமில்லை.

தற்பொழுது உள்ள சர்வதேச விமானத்தளம் தெற்கில் கட்டுநாயக்காவில் உள்ளதினால் தென் பகுதி மக்களுக்கு எல்லா வகையிலும் மிகவும் பிரயோசனமாகவும் வசதியாகவும் உள்ளது.

வடக்கிலும் கிழக்கிலும் வாழும் தமிழ் முஸ்லிம் மக்களுக்கும் ஒரு சர்வதேச விமானத்தளம் அவசியம். இதற்கான சகல வசதிகளுடனும் வடக்கு கிழக்கு மாநிலத்தில் நிலப்பரப்பு உண்டு,

வெளிநாடுகளுக்கு தொழில் நிமித்தமோ கல்வி கற்கும் நிமித்தமோ அல்லது வேறு விஷயங்களுக்காகவோ பிரயாணம் செய்து திரும்பி நாடு வரும் வடக்கு கிழக்கு மக்களுக்கும் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கும் வடக்கு கிழக்கு மாநிலத்தில் ஒரு சர்வதேச விமானத்தளம் அமைவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

எனவே இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமானத் தளத்தை வடக்கு கிழக்கு மாநிலத்தில் நிறுவ அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ம. சத்தியபாலன்

சுன்னாகம்.

### மன்னார் பாதை சீர்கேடு

மன்னார் வட்டக் கண்டல் வீதி கடந்த 15 ஆண்டுகளாக திருத்தப்படாத நிலையிலேயே இருக்கின்றது. மழை காலங்களில் இவ் வீதியில் பாதசாரிகள் கூட நடமாட முடியாத நிலை உள்ளது. குறிப்பாக அடம்பனிலிருந்து வட்டக்கண்டல் வரையான வீதி பாரிய குன்றுகளும் குழிகளும் நிறைந்ததாக இருக்கின்றது.

மழைக்காலங்களில் இங்கு மன்னார் சாலையால் செல்லும் ஒரு இ. போ. ச பஸ்ஸைக் கூட நிறுத்தும் அபாயம் உள்ளது முன்னைய காலங்களில் இவ்வாறு பஸ் சேவை நிறுத்தப்பட்டதுமுண்டு.

இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கும், மடு. திருக்கேதீஸ்வரம் போன்ற புனித தலங்களை இணைக்கும் இந்த முக்கிய வீதியைத் திருத்த சம்பந்தப்பட்டோர் அக்கறை காட்டுவார்களா?

எஸ். கே. செல்வம்

அடம்பன்

### கல்வித் திணைக்களம் பொறுப்பைத் தட்டிக் கழிக்கலாமா?

யாழ்ப்பாணத்தின் பிரபல்யமான பாடசாலை ஒன்றில் ஆண்டு ஒன்று (I) வகுப்பில் படிக்கின்ற பிள்ளைகள், அவ்வகுப்பிலுள்ள தளபாடங்களின் பற்றாக்குறை காரணமாக இருப்பதற்கு இடமின்றி அல்லல்படுகின்றார்கள்.

சற்றே வலிமை கூடிய பிள்ளைகள் தங்களுக்கென இருக்கைகளைத் தேடிக் கொள்ளுகின்றார்கள். வலிமை குன்றியவர்கள் பெலவீனமானவர்கள் இருப்பிட வசதியற்ற நிலையில் பாடங்களைப் பயில வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றார்கள்.

4ஆம், 5ஆம் ஆண்டில் கூட சிலர் முட்டுக்கால்களில் நின்று எழுகின்றார்களாம். பல பாடசாலைகளில் இதுபோல பற்றாக்குறை இருப்பதாகத் தெரிகின்றது

அறிக்கைகளை விடுவதுடன் மட்டும் நின்றுவிடாது பாடசாலைகளில் ஏற்படுகின்ற பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்து பாடசாலைகளை நல்ல நிலையில் வைத்திருக்க வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டிய பொறுப்பிலிருந்து கல்வியதிகாரிகள் தவறிவிடக் கூடாது

பெற்றோர்.

அரியாலை, யாழ்ப்பாணம்.

### குண்டும் குழியுமான யாழ்ப்பாண வீதிகள்

இன்று மாநகர சபை எல்லைக்குள் சீரழிந்திருக்கும் வீதிகள், ஒழுங்கைகள் அதிகம். குறைந்தது பத்து வருடங்களுக்கு மேல் வீதிகள் திருத்தப்பட்டதாகத் தெரியவில்லை. வீதிகளில் ஏற்பட்ட அனேக குழிகளுக்கு கற்கள் போட்டு தாரைக் காட்டி, மண்ணைப் போட்டனர். இதனால் கனரக வாகனம் செல்லும் போது கற்கள் சிதறுண்டு போகின்றன. பழையபடி குண்டும் குழியுமாக வீதிகள் காட்சியளிக்கின்றன;

உதவி உள்ளூராட்சி ஆணையாளர் இந்த நிலைமையை மாற்ற நடவடிக்கைகள் எடுப்பாரா?

க. பரமநாதன்

யாழ்ப்பாணம்

கலர் புகைப்படங்களை
குறைந்த செலவில்
குறுகிய காலத்தில்
PROCESSING AND PRINTING
செய்து நயமடைய நாடுங்கள்!
கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வரையுள்ளது

அரியாலையில் அமைந்துள்ள மின்தறி நிலையம்

**குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகோரல்**

எமது சங்கத்திற்குச் சொந்தமான அரியாலையில் இருக்கும் 44'' அகலம் கொண்ட 38'' துணி நெய்யக்கூடிய 24 இயந்திரங்களும் 1 நூல் சுற்றும் இயந்திரமும் கொண்ட மின்தறி நிலைய நெசவாலை குத்தகைக்கு விடுவதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்வி வைப்புப் பணம் - ரூபா 250/-
கேள்விப் பத்திரப் பணம் - ரூபா 10/-

கேள்வி விண்ணப்பம் பெறும் முடிவுத் திகதி-14-3-1989 நண்பகல் 12.00 மணி. விண்ணப்பமுடிவுத் திகதி- 15-3-1989 நண்பகல் 12.00 மணி வரை கேள்விப் பத்திர விண்ணப்பங்களை இல. 259, மின்சார நிலைய வீதியில் இருக்கும் எமது தலைமை அலுவலகத்தில், அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எதிர்பார்க்கும் ஆகக் குறைந்த மாதக் குத்தகை - ரூபா 5000/-; மின்தறிகளை முற்பகல் 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 5.00 மணி வரை (மதிய போசன இடைவேளை தவிர்த்து) அரியாலையில் உள்ள எமது சங்கக் கிளை இல. 20 கிளை முகாமையாளருடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

விண்ணப்ப மேலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''மின்தறி நிலையக் குத்தகை'' எனக் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் அரக்கு முத்திரை இடப்படிருத்தல் வேண்டும்.

பொது முகாமையாளர்.

259, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
24-2-1989. C/1704



# Vacancies for A Construction Company in Japan

1. Building Supervisors
2. Electricians for Buildings
3. Aircondition Mechanics
4. Plumbers
5. Welders - Oxydens N Arc
6. Barbenders
7. Crane Operators
   [1] Tower Crane
   [2] Mobile Crane
8. Showel Operators
9. Forklift Operators
10. Carpenters
11. Masons
12. Drivers - Construction
13. Heavy Vehicle Drivers
14. Cooks - Asian
15. Cooks Helpers
16. Construction - Labourers, Helpers.

SALARY U.S. DOLLARS 500
FOOD ACCOMMADATION AND MEDICAL FREE
AGE LIMIT 20 to 42 YEARS

**Vacancies for a reputed Restaurant**

1. Helpers
2. Waiters

AGE LIMIT UNDER 26 YEARS
SALARY U S DOLLARS 700
Food Accommadation, Medical and Uniform Free

**Conditions of Contract**

1. Two Years Contract
2. Food Accommadation Medical and Uniform Free
3. Ten Hours Work per Day
4. Return Ticket after Two Years
5. Insurance and other benefits - According to Japanese Labour Law
6. Original Experience Certificates, Qualification Certificate should be in hand for Interview and at the time of Arrival in duty place.

**Documents Requirements:-**

PASSPORT - ALL COUNTRIES ENDROSEMENT AND 10 PHOTOGRAPHS AND THE ALL THE CERTIFICATES PHOTOCOPY.

# T. V. TRAVELS & TOURIST

Brown Road,
Railway Station (Front)
Kokuvil.

(C/ 1611)


# மீனவர்களுக்கு தூத்துக்குடியில் பயிற்சி

யாழ்ப்பாணம் பெப் 26

''யாழ் மாவட்டத்தில் விவசாயப் பொருள்களை அடுத்து மீன் ஒரு ஏற்றுமதிப் பொருளாக விளங்குகிறது. தென் இந்தியாவிலுள்ள தூத்துக்குடியில் புகழ்பெற்ற மீன்பிடிப்பயிற்சி நிலையம் ஒன்று இருக்கிறது. இப்பயிற்சி நிலையத்துக்கு எமது பகுதியிலுள்ள இளம் மீனவர்களை அனுப்பி மீன் பிடித் துறையில் அவர்களுக்கு பயிற்சி அளிக்க உத்தேசித்துள்ளோம்''

மேற்கு ஜேர்மனியிலுள்ள தயாக்கொனிஸ் செஸ் வேர்க் என்னும் உதவி நிறுவனத்தால் வழங்கப்பட்ட மீன்பிடி வலைகளை இனக் கலவரத்தினால் பாதிக்கப்பட்ட மயிலிட்டிப் பகுதி மீனவர்களுக்கு வழங்கும் வைபவத்தில் உரையாற்றும்பொழுது மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு சுவாமிநாதன் ஸ்ரீபாஸ்கரன் மேற் கண்டவாறு கூறினார்.

## மல்லாகம்கிராமஅபிவிருத்திச் சங்கம் நடவடிக்கை

திரு. ஸ்ரீபாஸ்கரன் தனது உரையில் மேலும் கூறியதாவது:

இன்று நாம் உங்களுக்கு வழங்கியவலைகளையும் இதற்கு முன்பு வழங்கிய விவசாய உபகரணங்களையும் மேற்கு ஜேர்மனியில் இருந்து பெறுவதற்கு காரணகர்த்தாவாக விளங்குபவர் தென் இந்திய திருச்சபையின் பேராயர் டாக்டர் டி. ஜே. அம்பலவாணவர் ஆவர்.

அவருடைய சிபாரிசின் பேரிலேயே இவ் உதவி எமக்குக் கிடைத்தது.

மற்றும் மத நிறுவனங்களும் எம்முடன் ஒத்துழைத்தால் நாம் இன்னும் கூடிய உதவிகளைப் பெறக்கூடியதாய் இருக்கும்.

இப்படி அவர் கூறினார் (ச)

## குருநகரில் போதைப் பொருள் ஒழிப்புப் பிரசாரம்

குருநகர், பெப் 26

அழகையெல்லாம் அழித்து, ஆற்றலைக் குலைத்து, அறிவிழக்கச் செய்து - மனேவியாதி, நரம்புத்தளர்ச்சி, ஈரல் சிதைவு முதலிய நோய்களை உண்டாக்கும் போதைப் பொருள்களின் ஊடுருவலால் எம்இனம் அணு அணுவாக இறந்து கொண்டிருக்கிறது.

குருநகர், போதைப் பொருள்கள் ஒழிப்புச் சங்கம் வெளியிட்டுள்ள பணிவான வேண்டுகோளும் எச்சரிக்கையும் என்ற துண்டுப்பிரசுரத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கள்ளச் சாராயம் வடிப்பவர்களே! உங்கள் வடிசாலைகளுக்கு மூடுவிழா வையுங்கள்! நாடு விட்டு நாடு 'கடத்தப் பட்டு வரும் கஞ்சா, அபின், கொக்கேயின், கிரோயின், கொடீன், மோப்பின் போன்ற போதைப்பொருள்களைக் காவிச்சென்று எம்மை அழிக்காதீர்!

இவ்வளவு எடுத்துச் சொல்லியும் உங்கள் செயல் தொடருமானுல் கடும் நடவடிக்கைமூலம் உங்கள் போதைவஸ்து விற்பனை நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்,

சபதம் எடுப்போம் போதைப் பொருள்களை ஒழித்துக் கட்டுவோம்.

இவ்வாறு அந்தத் துண்டுப் பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-51)

## பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப் 26

யாழ்ப்பாணம் வர்த்தக ஊழியர் சங்கத்தின் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சங்கரப்பிள்ளை கட்டட மூன்றுவது மாடியில் நடைபெறும் (உ-க)

## 520 டாக்டர்களுக்கு உடன் வேலைவாய்ப்பு

### அரசாங்கம் பரிசீலிக்கிறது

கொழும்பு பெப் 26

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் பேராதனை, காலி மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகங்களில் உள்ள வைத்திய பீடங்களில் படித்து விட்டு வெளியேறிய 520 டாக்டர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவது பற்றி அரசு பரிசிலனை செய்து வருகிறது.

''எவ்வளவு விரைவில் அவர்களுக்கு நியமனங்கள் வழங்க முடியுமோ அவ்வளவு விரைவில் வழங்க முயற்சிக்கப்படுகிறது'' -என்று சுகாதார அமைச்சுச் செயலாளர் டாக்டர் மலிங்கா பெரிஞண்டோ சொன்னுர்.

வடகொழும்பு மருத்துவக் கல்லூரிப் பிரச்சினை காரணமாக இவர்களுக்கு நியமனம் வழங்குவது தடைப்பட்டதாகக் கூறப்பட்டது.

''இந்த டாக்டர்களுக்கு உடனே நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கும்படி ஜனுதிபதி கேட்டுள்ளார். விரைவில் நியமனங்களை வழங்க அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்தப்படுகின்றன.''

-இப்படி டாக்டர் பெரிஞண்டோ மேலும் சொன்னுர். [இ-எ]

## நோயாளர் கஷ்டம்

வடமராட்சி பெப், 26

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் போதிய தாதிகள் ஊழியர்கள் இல்லாமையால் நோயாளர்கள் பல கஷ்டங்களை அனுவித்து வருகின்றனர்.

ஊழியர்கள் தட்டுப்பாடு சம்பந்தமாக சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்குப்பலதடவை எடுத்துக் காட்டியும் எவ்வித பலனும் ஏற்படவில்லை என மேற்படி வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வடமராட்சியில் உள்ள ஒரே ஒரு சகல வசதிகளும் கொண்ட வைத்தியசாலை இது என்பது குறிப்பிடத்தக்கது. (ச-160)


**MALTIES CHESTO**

இவைகளை எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**Sri Durga Hardware Stores**
125, Stanley Road,
Jaffna.
(9368)


## மக்கள் முகம்

**கலைமகள் சனசமூக நிலையம்**

தொண்டமனுறு கலைமகள் சன சமூக நிலையத்தின் நடப்பாண்டு நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெர்வாகியுள்ளனர். போஷகர் திரு. கி. கணேசன், தலைவர் திரு. கி முருகேசு, உபதலைவர், திரு. மு. பஞ்சலிங்கம், செயலாளர் திரு நா. சண்முகசுந்தரம், உப செயலாளர் திரு. இ. தியாகராசா பொருளாளர் திரு, சு. நடேசபிள்ளை- (ச)

## கிரிக்கெட் சங்கம்

கரவெட்டி, பெப்26

பருத்தித்துறை மாவட்ட கிரிக்கெட் சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. இக்கழகத்துக்கு தற்காலிகத் தலைவாரக வே. தங்கராசாவும், செயலாளராக மு. வேதாபரணமும், செயற்குழுவினராக வீ கே. ஆறுமுகம், சி.சோதிரவி, சி. க. இராவேந்திரன், வ. செல்வராசா, எஸ் வாமதேவன், ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

## சென் ஜோன்ஸ் பழைய மாணவர் சங்கம்

யாழ்ப்பாணம், பெப். 26

யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்- திரு. எஸ். பஞ்சலிங்கம் துணைத் தலைவர்கள்- திரு. ஜெகா செந்தில்நாதா, டாக்டர் ரி டபிள்யூ ஜெயகுலராஜா, திரு. சி சிறீரங்கநாதன், திரு.பி சிவலோகநாதன்.

செயலாளர்- திரு. கே. என். வை. மோறிஸ் துணைச் செயலாளர்- திரு கே. என். குணரத்தினம் பொருளாளர்- திரு.கே.என் பொன்னையா.

20 பேரவைக்கொண்ட நிர்வாகக் கமிட்டியும் தெரிவு செய்யப்பட்டது. (ச)

## இந்து இளைஞர் பேரவை

யாழ்ப்பாணம், பெப், 26

யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் வருடாந்தக் கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள்: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள், சிவ நெறிப்புரவலர் திரு. க. கனகராசா தலைவர்: திரு. வே. கே. தனபாலன் உப-தலைவர்கள்: திருவாளர்கள் திரு. சி அருளானந்தசிவம். ந. சிவரஞ்சன் செயலாளர்: திரு. இ. தவகோபால் பொருளாளர்: திரு. சிவ. ஆறுமுகசுவாமி உப-செயலாளர்: திரு. சி. வரதராஜா வெளியீட்டுச் செயலாளர்: திரு. ச. செந்துராஜா. (இ-ச)

## சமய அறிவுப் போட்டி

மாணவர்களின் மத்தியில் திருக்குறளை மனனம் செய்விக்கும் பணியைச் சகல பாடசாலைகளும், பொது நல நிறுவனங்களும், குறிப்பாக சனசமூக நிலையங்களும் முன்னின்று மேற்கொள்ளவேண்டும்.

ந. பாலச்சந்திரன் தலைமையில் யாழ் உதயதாரகை சனசமூக நிலையத்தில் நடைபெற்ற விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் சிவதர்மவள்ளல் திரு க. கனகராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிலையத்தால் நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டியில் வெற்றி பெற்ற சிறுவர்களுக்கு திரு. கனகராசா பரிசில்களை வழங்கினர்

சித்தவைத்தியர் சிற்றம்பலம் தொழிலதிபர் திரு எஸ் தியாகராசா வண்ணை சிவன்கோவில் அறங்காவலர் அழகக்கோன் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றினர். (ச-119)

## 1,250 பேர் நிவாரணப்பணம் பெற்றனர்

பச்சிலைப்பள்ளி பெப் 26

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பாதிக்கப்பட்டவர்களுக்கான புனர்வாழ்வு நிவாரணப்படிவம் வழங்கப்பட்டு இதுவரை ஆயிரத்து இருநூற்றி ஐம்பது பேருக்கு நிவாரணப் பணம் காசோலை மூலம் வழங்கப்பட்டு விட்டது ஏனையோருக்குவிரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பளை உதவி அரசாங்க அதிபர் சு. கந்தசாமி தெரிவித்தார். (இ-171)

## அமைச்சர் உத்தரவு

தீவிரவாதிகளின் பயமுறுத்தல் காரணமாக மூடப்படும் வர்த்தக நிலையங்களைத் திறக்கும்படி பொலீஸாருக்கு பாதுகாப்பு துணை அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன உத்தரவிட்டிருக்கிறுர்.

இப் பயமுறுத்தல்களை இனியும் பொறுக்க முடியாது என்றும் அமைச்சர் கூறினர். (இ-எ)

## பூநகரியில் புதிய கட்டட திறப்பு விழா

பூநகரி பெப். 26

பூநகரி செல்லியாதீவு அ. த கலவன் பாடசாலையின் புதிய கட்டடத் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக திரு சி. வேலாயுதம் கிளிநொச்சி கல்வி அதிகாரி திரு வி. கே. பரஞ்சோதி பூநகரி கோட்டத்தணி அதிபர் ஆகியோரும் சிறப்பு விருந்தினராக பூநகரி மகாவித்தியாலய உப அதிபர் திரு கே. குலசேகரம் பூநகர அபிவிருத்திச் சங்கத் துணைத் தலைவர் திரு. பொ. தங்கராசா கிராமசேவையாளர் திரு. க. வாமதேவன் ஆகியோரும் கலந்து கொண்டனர்,

விழா முடிவில் பாடசாலை அதிபர் திரு ஆ. இரத்தினசிங்கம் நன்றியுரை நிகழ்த்தினர்.


**'M' Three Travel**

**பெருமையுடன் வழங்கும் உடனடிப் பிரயாண ஒழுங்குகள்**

✱ சவூதி அரேபியா

1. Mechanical Engineer — 1500 SR
2. Electrical Engineer — 1500 SR
3. Electronic Engineer — 1700 SR
4. A. C Mechanic — 800 SR
5. Plumber
6. Steel Fixer
7. Welders
8. General Electricians
9. Masons
10. Carpenters
11. Diesel / Petrol Mechanic
12. Auto Electricians
13. Gardeners
14. Indoor Cleaners
15. House Maids
16. Excavator Operator
17. Grader Operator

★ புதிதாக கடவுச்சீட்டு வேண்டுபவர்களுக்கு ஒரு கிழமையில் கடவுச்சீட்டு எடுத்துக் கொடுக்கப்படும்.

★★ எங்களிடம் புதுக்கடவுச்சீட்டு எடுப்பவர்கள் எங்கள் மூலம் வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்ல விரும்பினுல் உடனடியாக விசா செய்து கொடுக்கப்படும்.

★★★ பொன்ட் [Bond] செய்து கொடுக்கப்படும்.

✱ நம்பிக்கை ✱ நாணயம் என்பவற்றிற்கு நீங்கள் நாட வேண்டிய ஸ்தாபனம்

**'M' THREE TRAVEL**

இவை எல்லாவற்றிற்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
'இந்திரபவனம்'
சோதிலேன்,
கல்லூரி வீதி,
காங்கேசன் துறை.

No. 1, 2 ஆம் ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு:- எம்மிடம் பாஸ்போட் தந்தவர்கள், தங்களது பிரயாண ஒழுங்குகள் செய்யப்பட்டுவிட்டன இது சம்பந்தமாக காரியாலயத்துடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

எம் மூலமாக பிரயாணம் செய்தவர்களின் அடையாள அட்டைகளை அவர்களின் உறவினர்கள் உடன் வந்து பெற்றுச் செல்லுமாறு கேட்டுக்கொள்கிறோம். (C-1479)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**கணபதிப்பிள்ளை பாலச்சந்திரன்**
B. Sc. (HONS)
[முன்னைநாள் நிர்வாக இயக்குனர் [சீ-நோர்]

பாலர் போல் உள்ளம் கொண்ட
பாலச்சந்திரன் மறைந்த
ஓராண்டுநினைவாக அஞ்சலிசெலுத்துகின்றோம்
ஆண்டொன்று மறைந்தாலும்
உம் அன்புருவம் எம்மை விட்டு
நீங்காது என்றென்றும்
நினைக்க மனம் வேகுதையா.

எல்லோர்க்கும் நல்லராய்
இருந்திங்கு சேவை செய்தீர்
பண்பான மனிதரென்று
பலராலும் புகழப்பட்டீர்

பொல்லாத காலன் உம்மைப்
பொறுக்கமாட்டாமல் அந்தோ
சொல்லாமல் கொள்ளாமல்
கொன்று சென்று விட்டானே!

கனிவாக உமதன்பைக் கலந்து அனைவருக்கும்
நினைவாக நிலைத்திருக்க
நீங்காத செயல் படைத்தாய்
இனிதாக உமதான்மா இறைவனடி சேர்ந்து
நிலையான வாழ்வு பெற
இறையன்பை வேண்டுகின்றோம்

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, மகள் மற்றும்
சீ—நோர் ஊழியர்கள்.

[C 1702]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

வில்லே ருழவர் பகை கொளினும் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை.

**பொருள்:**

வில்லேந்திப் போர் புரியும் படை வீரரும் பகைத்துக் கொண்டாலும் செல்வாக்குடைய அறிஞர்களுடன் பகைத்துக்கொள்ளக் கூடாது.

உதயன்
உண்மை - விழிப்பு - ...
இல. 392/8 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம் 23073
26. 2. 1989 த. பெ. இல 23

## நாளும் சாகும் நிலையா?

கத்தரிக்காய், பீட்ரூட் கறிகளுடன் மதிய உணவு உண்ட தொழிலாளர்கள் மயங்கிய நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் கடந்த வாரம் இணுவிலில் இடம் பெற்றது.

உணவு நஞ்சாகியதால், விளைபொருள்களில் நஞ்சேறியதால் மக்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படும் சம்பவங்கள் இப்போது அதிகரித்து விட்டன. அவை அடிக்கடி நடந்தாலுங்கூட, உத்தியோக பூர்வமாகத் தெரிய வருபவை ஒரு சிலவே.

விஞ்ஞானம் வளர்ந்து விட்டது உண்மை தான். அது மனித வாழ்க்கையில் விளைவிக்கும் நன்மைகளுக்குச் சமமான தீமைகளையும் உண்டாக்கி வருகிறது. அந்தத் தீமைகளை — பாதிப்புகளை — இயன்றவரை தவிர்த்துக் கொள்வது மனிதனின் பொறுப்பே.

விவசாயத் துறையில், உற்பத்தியை அதிகரிப்பதற்காகப் பல நவீன விஞ்ஞான உத்திகளும், செயல்முறைகளும், இரசாயனங்களும், இயந்திராதிகளும் அறிமுகமாகி விட்டன. மேலை நாடுகளில் அவை உணவுப் பெருக்கத்துக்குப் பெருமளவில் உதவி வருகின்றன.

கீழைத்தேச நாடுகளிலும், இலங்கை போன்ற வளர்ந்து வரும் நாடுகளிலும் நவீன விவசாய விஞ்ஞானம் ஓரளவுக்கு அறிமுகமாகி விட்டது.

ஆனால் அது தக்கபடி உரிய அளவில், உசந்த விதத்தில் உபயோகிக்கப்படாமையால், மக்கள் பல ஆபத்துகளையும், கஷ்டங்களையும் எதிர்நோக்க வேண்டி உள்ளது.

வீட்டுத் தோட்டங்களில் கூட செயற்கை உரமும், பூச்சி நாசினியும் அளவுக்கு அதிகமாகப் பாவிக்கப்படுகின்றன. தோட்டங்களில் தொழில் ரீதியாகச் செய்யப்படும் பயிர்ச் செய்கையில் அவை இரண்டின் பாவனையும் தாராளம்.

இவற்றின் தாக்கம் விளைபொருள்களில் இல்லாமற் போக இடமில்லை. அதனால் மனிதன் நாளாந்தம் தன்னை அறியாமலே, உணர முடியாமல் தனது உடம்பைக் கெடுக்கவல்ல வஸ்துகளை உட்கொள்ளுகிறான்.

பயிர் வகைகள் மட்டுமா? புட்டிகளில், பைக்கட்டுகளில் அடைக்கப்பட்ட உணவுப் பொருள்கள், தயாரிக்கப்பட்ட உணவுப் பொருள்கள், உறைய வைக்கப்பட்ட உணவுப் பொருள்கள் என்று எல்லாவற்றிலும் மனித உடலுக்குக் கேடுதல் விளைவிக்கும் வஸ்துகள் சிறிய அளவிலாவது சேர்ந்துள்ளன.

அவை நாளாந்தம் சிறிது சிறிதாக மனித உடலில் சேகரமாகின்றன. மனிதன் தினமும் மெது மெதுவாகச் செத்துக்கொண்டிருக்கின்றான்!

இப்போது புதிது புதிதாகத் தோன்றும் பல வியாதிகளுக்கு உணவுகளும், உணவுப் பழக்கங்களுமே பிரதான காரணிகளாகின்றன. அதாவது மனிதன் ஒரே நாளில் மரணமாவதைவிட நாளாந்தம் செத்துக் கொண்டிருக்க உணவு வகைகளே அவனுக்கு எதிரிகளாகின்றன எனலாம்.

இந்த நிலையைத் தவிர்ப்பது அவசியமும் அவசரமும் ஆகும்.

விவசாயத்திலும், உணவுப் பொருள் மற்றும் பாவனைப் பொருள்கள் உற்பத்தியிலும் விஞ்ஞான உத்திகள் உசந்த விதத்தில் கையாளப்படுவதை உறுதிசெய்வது அவசியம். அதற்கு வேண்டிய அறிவும், தகவல்களும் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் ஊட்டப்படாவிடில் அது பாதகமான நிலையையே தொடரச் செய்யும்.

20 ஆயிரம் அடி உயரத்தில்

# நடுவானில் போயிங் விமானத்தின் 'வயிறு' பிரிந்தது!

# 9 பயணிகள் பசுபிக் கடலில் விழுந்து மரணம்!!

ஹொனலுலு, பெப். 25

350 பயணிகளுடன் பசுபிக் கடலின் மேல் நடுவானில் பறந்து கொண்டிருந்த அமெரிக்க போயிங் விமானம் ஒன்றின் வயிற்றுப் பகுதி திடீரென்று பிரிந்ததினால் 9 பயணிகள் உயிரிழந்தனர்.

அப்போது விமானம் 20 ஆயிரம் அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்தது.

விமானத்தில் இருந்து வெளியே தள்ளப்பட்ட 9 பேர் கடலினுள் விழுந்தனர்.

இரண்டு என்ஜின்களுடன் கூடிய 747 போயிங் விமானம் 1970 முதல் சேவையில் ஈடுபட்டு வந்தது.

உடனே பைலட், விமானத்தை அருகில் உள்ள ஹொனலுலு விமான நிலையத்தில் அவசரமாக இறக்கினார்.

### 350 பயணிகள் உயிர்தப்பினர்

ஹவாய்தீவில் இருந்து நியூசிலந்து நோக்கிச் சென்று கொண்டிருந்த சமயம் தான் இவ்விபத்து இடம் பெற்றது.

விமானத்தில் எரிபொருள் மற்றும் சரக்குகள் வைக்கும் அறையின் வயிற்றுப் பகுதி தான் திடீரென்று இரண்டாகப் பிரிவதற்கு முன்னால் வெடிச் சத்தம் ஒன்று கேட்டதாக பயணிகள் சிலர் தெரிவித்தனர்.

விபத்துக்குக் காரணம் சதிச்செயலா? இல்லையா என்பது இன்னமும் தெரியவரவில்லை.

ஜப்பான் மன்னர் ஹிரோஹிட்டோவின் இறுதிச் சடங்குக்கு முன்னர் ஜப்பான் சிறையில் உள்ள செம்படைக் கெரில்லாக்களை விடுதலை செய்யத் தவறினால் அமெரிக்க விமானம் ஒன்றைக் குண்டு வைத்துத் தகர்க்கப் போவதாக மர்ம மனிதன் ஒருவர் ஹொனலுலு வானொலி நிலையத்திற்கு கடந்த மாதம் தொலைபேசி மூலம் எச்சரித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. [எ]

## 'போபோஸ்' டெலிவிஷன்படம் பூமிக்கு கிடைத்தது!

மாஸ்கோ, பெப். 25

செவ்வாய் கிரகத்திற்கு இரண்டு சந்திரன்கள் உண்டு.

ஒன்று போபோஸ் மற்றது டைமோஸ்.

தற்போது செவ்வாய்க் கிரகத்தை வலம் வந்து கொண்டிருக்கிற சோவியத் விண்கலம் போபோஸ் -2, கடந்த செவ்வாய்க்கிழமை போபோஸ் சந்திரனின் முதலாவது தொகுதி டெலிவிஷன் படங்களை பூமிக்கு அனுப்பிவைத்தது. சோவியத் விண்கலம் அடுத்த சில வாரங்களில் போபோஸ் சந்திரனை 160 அடி தூரத்தில் இருந்து படம் பிடிக்க உள்ளது.

போபோஸ் படங்களில் இருந்து கிடைக்கும் தகவல்கள் செவ்வாய்க் கிரகத்தில் காணப்பட்ட நீர்ப்பிரதேசம் பின்னர் காணாமற்போன மர்மத்தை துலக்கக்கூடும் என்று சோவியத் போபோஸ் ஆராய்ச்சி பயணத்திட்டத் தலைவர் ரோல்ட் சக்டேயெவ் தெரிவித்தார் என டாஸ் செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

கடந்த ஆண்டு ஜூலை மாதம் விண்வெளிக்கு அனுப்பப்பட்ட போபோஸ் 2 விண்கலம் கடந்த மாதம் தான் செவ்வாய்க் கிரகத்தை வலம் வர ஆரம்பித்தது தெரிந்ததே. (எ)

## ருஷ்டி பற்றி சோவியத் அமைச்சர் கோமெனியுடன் பேசுவார்!

தெஹ்ரான், பெப். 25

சோவியத் யூனியன் வெளியுறவு அமைச்சர் எட்வர்ட் ஷெர்வானட்சேயின் மத்திய கிழக்குப் பிரச்சினை தொடர்பான தூது இறுதிக் கட்டத்திற்கு வந்துவிட்டது.

இறுதியாக ஈரான் தலைவர்களைச் சந்திப்பதற்காக சோவியத் அமைச்சர் தெஹ்ரான் செல்கிறார்.

ஏற்கனவே எகிப்து, ஈராக், ஜோர்தான், இஸ்ரவேல் ஆகிய நாடுகளின் தலைவர்களையும் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் அரபாத்தையும் சந்தித்துப் பேசினார்.

'சாத்தானின் கவிதைகள்' நூல் தொடர்பான பிரச்சினை எழுந்த பின்னர் ஈரானின் ஆத்மீகத் தலைவர் ஆயதுல்லா கோமெனியைச் சந்திக்க உள்ள முதலாவது வெளிநாட்டுத் தலைவர் திரு. ஷெர்வானட்சே ஆவார்.

பிரச்சினைக்குரிய நூலை எழுதிய ருஷ்டி மீது விதிக்கப்பட்ட மரண தண்டனை பற்றி கோமெனியுடன் பேசும்படி பிரிட்டன், சோவியத் அமைச்சரைக் கேட்டுள்ளது.

இதேவேளை — டோக்கியோவில் ஜப்பான் சக்கரவர்த்தி ஹிரோஹிட்டோவின் மரணச்சடங்குக்குச் சென்று இருந்த உலகத்தலைவர்கள் பலர், இந்த நூலினால் எழுந்திருக்கும் பிரச்சினைகள் பற்றி பேசினர் என்று அறிவிக்கப்பட்டது (எ)

## கிரிக்கெட் வீரருக்கு அனுமதி

மேற்கிந்திய தீவுகள் செல்லும் இந்திய கிரிக்கெட் அணியுடன் செல்ல வீரர் நவஜோத் சிங் சித்துவுக்கு பஞ்சாப் உயர் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியது.

அவருக்கு வழங்கிய ஜாமீனை ரத்து செய்ய வேண்டும் என்று கோரித் தாக்கல் செய்யப்பட்ட மனுவையும் உயர் நீதிமன்றம் நிராகரித்து விட்டது.

கொலைச் சம்பவம் ஒன்று தொடர்பாக சித்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். (ஒ-எ)

## 30 வருடச் சிறை

டெல் அவிவ் பெப் 25

இஸ்ரவேலிய விமானம் ஒன்றை கடத்த முயற்சித்த சம்பவம் தொடர்பாக மூன்று பலஸ்தீனியர்களுக்கு தலா 30 வருடச்சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது

இஸ்ரவேலிய ராணுவ நீதிமன்றம் இத்தண்டனையை விதித்தது

குற்றத்தை எதிரிகள் ஒப்புக் கொண்டனர் [எ]

## ராஜீவ் கோரிக்கை

புதுடில்லி பெப் 25

'சாத்தானின் கவிதைகள்' நூல் பற்றிய சர்ச்சை சம்பந்தமாக எச்சரிக்கையுடன் இருக்கும்படி இந்திய மக்களை பிரதமர் ராஜீவ் காந்தி கேட்டிருக்கிறார்.

(எ)

தமிழ் நாட்டில்

## ஒப்பனை தலைவர்கள் இன்று இல்லை: ஒப்பற்ற தலைவர் ஆட்சி புரிகிறார்!

### அ. தி. மு. க. எம். பி பேச்சு

ஒப்பனைத் தலைவர்கள் ஆண்ட காலம் வரலாற்றில் உண்டு ஆனால் ஒப்பற்ற தலைவரின் ஆட்சி இப்போது நடக்கிறது என அ. தி. மு. க எம். பி. ஆலடி அருணா பேசினார்.

மேலும் "நான் தவறு செய்து விட்டேன். முதல்வர் கருணாநிதி காலில் விழுந்து பெருந்திரளாகக் கூடியிருக்கும் உங்கள் முன்னிலையில் மன்னிப்பு கேட்கிறேன்' என்றார்.

வருவாய்த்துறை அமைச்சர் நாஞ்சில் மனோகரனின் 60 வது ஆண்டு நிறைவு விழாவை சென்னை மாவட்ட தி. மு. க. திருவல்லிக்கேணியில் கொண்டாடியது விழாவில் கலந்துகொண்டு ஆலடி அருணா பேசியதாவது;

நான் தவறு செய்தால் தட்டிக்கேட்கும் உரிமை முதல்வர் கருணாநிதிக்கு உண்டு

நான் தமிழ்ச் சமுதாயத்திற்கும், திராவிட பண்பாட்டிற்கும் துரோகம் செய்துவிட்டேன்.

தி. மு. க. தலைவர் கருணாநிதிக்கும் துரோகம் செய்துவிட்டேன் இதற்காக உங்களிடம் மண்டியிட்டு மன்னிப்பு கேட்கிறேன்

நான் செய்த தவறுகளை நியாயப்படுத்தி உங்களிடம் மன்னிப்பு கேட்க வரவில்லை.

என் தவறை உணர்ந்து மன்னிப்பு கேட்கிறேன் கருணாநிதி என்னை மன்னித்தால் நீங்கள் மன்னித்ததாக கருதுவேன்.

நீங்கள் மன்னித்தால் தமிழ்ச் சமுதாயமே என்னை மன்னித்ததாக மகிழ்ச்சியடைவேன்.

இப்போது கருணாநிதி முதல்வராகி விட்டார். இதற்கு முன்பு தமிழகம் எல்லா துறைகளிலும் பின்தங்கி இருந்தது. தமிழக மக்கள் அனைவரும் கருணாநிதி தான் முதல்வராக வரவேண்டும் என்று விரும்பினர். எனக்கும் அந்த ஆசை இருந்தது.

நான் அ. தி. மு. க. வில் இருந்தாலும், தடம் மாறாமல் இருந்து வருகிறேன்.

பெரியார் பேச்சுகளுக்கும், அண்ணா அறிவுரைகளுக்கும் நான் என்றும் மாறாக நடந்ததில்லை.

நான் மூகாம்பிகை கோயிலுக்கு போய் சாமி கும்பிட்டதில்லை. பச்சைக்குத்திக் கொண்டதும் அல்ல. ரோம் நகரத்தில் கூட ஒப்பற்ற தலைவர்கள் கருணாநிதியைப் போல உருவானார்கள். ஒப்பனைத் தலைவர்களும் நம் ஊரைப்போல அங்கும் இருந்தார்கள் இதுதான் உலக வரலாறு. சில சமயம் சரசகாரியையும் நமக்கு அறிமுகம் செய்து வைத்துள்ளது அந்த வரலாற்றையும் இப்போது இங்கே காணுகிறோம்.

இவ்வாறு ஆலடி அருணா பேசினார். (எ-4)

## இந்திய நாடாளுமன்றத் தேர்தல் வருகிற செப்டம்பர், அக்டோபரில்?

இந்திய நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் அல்லது அக்டோபர் மாதத்தில் நடத்தப்பட உள்ளதாகக் கூறப்படுகிறது.

இது பற்றி தமிழ்நாடு முதலமைச்சர் மு.கருணாநிதி, தமிழ்நாடு சட்டசபைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

'நாம் மாநில ஆட்சியில் உள்ளோம். அதனால் இந்தத் தகவல் எமக்குக் கிடைத்துள்ளது. அப்படி நாடாளுமன்றத் தேர்தல் வரும் போது சென்னை மற்றும் மாநகரசபைத் தேர்தல்களை அக்காலத்தில் நடத்த முடியாது. அதனால் தான் மாநகரசபைத் தேர்தல்கள் ஏப்ரல் மாதம் நடத்தப்படுகின்றன.

இப்படி முதலமைச்சர் தெரிவித்தார். (எ)

### புஷ்ஷின் சீன விஜயம்

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் இரண்டு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இன்று பீகிங் செல்கிறார்.

டோக்கியோவில் ஜப்பான் சக்கரவர்த்தி ஹிரோஹிட்டோவின் மரணச்சடங்கில் கலந்து கொண்டு விட்டு சீனா புறப்பட்டார்.

உலகைக் கலக்கும் 'சாத்தானின் கவிதைகள்'

# தலைமறைவான எழுத்தாளர் ருஷ்டியைக் கொல்ல கோமெனியின் 'நீர்மூழ்கிகள்' லண்டன் விரைவு!

உலகில் இன்று பரபரப்பாகப் பேசப்படும் எழுத்தாளர் சால்மன் ருஷ்டி.

இவர் ஒரு கவிஞருங்கூட. சமீபத்தில் 'சாத்தானின் கவிதைகள்' ('Satanic Verses') என்ற நூலை எழுதினார்.

இந்தியாவில் பிறந்த இவர், தற்போது பிரிட்டனில் வசிக்கிறார்.

'சாத்தானின் கவிதைகள்' என்ற நூலை பிரிட்டனில் உள்ள பென்குயின் வைக்கிங் நிறுவனம் வெளியிட்டு உள்ளது.

இஸ்லாமியர்களையும் முகமது நபிகள் நாயகத்தையும் அவமதிக்கும் வகையில் இந்த புத்தகம் எழுதப்பட்டுள்ளது என்பது முஸ்லிம் நாடுகளின் கருத்து.

இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகியன இந்த நூலுக்குத் தடை விதித்துள்ளன.

புத்தகம் வெளி வந்ததும் முஸ்லிம் நாடுகளில் எதிர்ப்புக் கலவரங்கள் தோன்றின.

இதைத் தொடர்ந்து ஈரான் தலைநகர் தெஹ்ரானில் ஆத்மீகத் தலைவர் ஆயதுல்லா கோமெனி உயர்மட்ட ஆலோசனை கூட்டம் ஒன்றை நடத்தினார். பல முக்கிய நாடுகளின் பிரதிநிதிகளும் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

ருஷ்டியின் 'சாத்தானின் கவிதைகள்' புத்தகம் வரிக்கு வரி ஆராயப்பட்டது.

முடிவில் ஆயதுல்லா கோமெனி ஒரு தீர்ப்பு அளித்தார்.

அது உலகப்பிரசித்தி பெற்ற தீர்ப்பாக மாறி உலகையே ஒரு கலக்கு கலக்கி வருகிறது.

### எங்கிருந்தாலும் கொல்க!

தீர்ப்பு இதுதான்.

"ஆலோசனை கூறுவதாக நினைத்துக்கொண்டு



கோமெனி

ருஷ்டி இந்த கவிதைப் புத்தகத்தை எழுதி உள்ளார்; நபிகள் நாயகத்தை கேவலப்படுத்தி விட்டார். இஸ்லாமின் புனிதத்தை அவமதித்த அவருக்கு மரண தண்டனை விதிக்கிறேன். அவர் எங்கு இருக்கிறார் என்பது தெரியவில்லை. இருக்குமிடம் தெரிந்தால் அவர்கள் எங்களுக்கு ... அவர் எந்த நாட்டில் இருந்தாலும் அங்கிருந்து வெளியேற்றி ஈரானுக்கு அவரை அனுப்பிவைக்க வேண்டும்.

"நான் கொடுத்த மரணதண்டனையை உடனடியாக நிறைவேற்றுவது முக்கியம்.

"உலகம் முழுவதும் உள்ள இஸ்லாமிய மக்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

சால்மன் ருஷ்டி எங்கிருந்தாலும் அவரைக் கண்டுபிடித்து மரண தண்டனையை நிறைவேற்றுங்கள்.

வெளிநாட்டில் தங்கியுள்ள ருஷ்டியை கொலை செய்பவருக்கு 35 லட்சம் ரூபா பரிசு வழங்கப்படும்.

ஈரானில் உள்ள முஸ்லிம் யாராவது அவரைக் கொன்றால் 95 இலட்சம் ரூபா பரிசு வழங்கப்படும்.

ருஷ்டியைக் கொல்லும் முயற்சியில் யாராவது மரணமடைந்தால் அவரது குடும்பத்திற்கு வெகுமதி அளிக்கப்படும்; அவர் தியாகியாகவும் அறிவிக்கப்படுவார்.

இப்படி ஆயதுல்லா கோமெனி தீர்ப்பில் கூறியிருக்கிறார்.

### நிவாரண கமிட்டி

இந்தக் கொலைக்காக கோமெனி ஒரு நிவாரண கமிட்டியை அமைத்து உள்ளார். கோர்தாத் நிவாரண ஏஜென்ஸி என்று இதற்குப் பெயர் ... இருந்து இதற்கு நன்கொடை குவிகிறது

கோமெனியின் தற்கொலைப்படை வீரர்கள் உலகம் முழுவதிலும் உள்ளனர்.

பிரிட்டன், இந்தியா, பாகிஸ்தான் உட்பட பல நாடுகளில் உள்ள இவர்கள் ருஷ்டியைத் தேடி



கவிதை நூலுடன் ருஷ்டி

வருகின்றனர்.

### ருஷ்டி எங்கே?

'மரணதண்டனை' உத்தரவைத் தொடர்ந்து ருஷ்டி தலைமறைவாகி விட்டார்.

அவர் எங்கே இருக்கிறார் என்பது ஒருவருக்கும் தெரியாது

ருஷ்டி பிரிட்டனில் இருக்கிறாரா? இதை பிரிட்டனும் உறுதிப்படுத்தவில்லை.

புத்தகத்தை வெளியிட்ட பென்குயின் நிறுவனத்திற்கும் பயமுறுத்தல்கள் விடப்பட்டுள்ளன.

பிரிட்டனில் தலைமறைவாக ருஷ்டி இருக்கிறார் என்ற தகவலைத் தொடர்ந்து, கோமெனி ஆதரவு தற்கொலைப் படையினர் லண்டனுக்கு விரைந்துள்ளனர்.

முன்னர் அமெரிக்கா செல்ல ருஷ்டியும் பென்குயின் பதிப்பாளரும் திட்டமிட்டிருந்தனர்.

மரணதண்டனை உத்தரவைத் தொடர்ந்து அந்தத் திட்டம் கைவிடப்பட்டது

லண்டனில் உள்ள தற்கொலைப் படையில் மட்டும் ஆயிரம்பேர் உள்ளனர். கோமெனியின் கட்டளையை இவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர் இவர்களிடம் நவீன ஆயுதங்கள் எதுவும் இல்லை என்றாலும், சிலரிடம் சகல ஆயுத வசதிகளும் உண்டு. இவர்களை ஈரானில் 'நீர்மூழ்கிகள்' என்ற அடைமொழியுடன் குறிப்பிடுகின்றனர் என்று லண்டன் டெயிலிகிராப் தெரிவித்திருக்கிறது.

### இந்தியாவிலும் தற்கொலைப்படை

இந்தத் தற்கொலைப்படை வீரர்கள் இந்தியாவிலும் இருப்பதாகக் கூறப்படுகிறது.

பம்பாயில் உள்ள யு என் ஐ செய்தி நிறுவனத்துடன் தொலைபேசியில் ஒருவர் தொடர்பு கொண்டார்;

அவர் சொன்னதாவது; "ருஷ்டி எங்கிருக்கிறார் என்பது எங்களுக்கு தெரியும். ஆனால் பிரிட்டிஷ் அரசுக்கு இந்த விஷயத்தில் பிரச்சினையை ஏற்படுத்த நாம் விரும்பவில்லை'.

தலைமறைவாக இருக்கும் ருஷ்டியை சம்பந்தப்பட்ட நாடு வெளியேற்ற வேண்டும். அதுவரை பிரிட்டனின் விமானங்களைக் குண்டு வைத்து தகர்ப்போம். இந்தியாவிற்கு வரும், இந்தியாவில் இருந்து செல்லும் பிரிட்டனின் விமானங்களைத் தகர்ப்பதுதான் எங்கள் நோக்கம்."- இப்படி மர்ம மனிதன் டெலிபோனில் சொன்னான்.

### ஒரே மர்மம்

இப்படி மர்மத்துக்கு மேல் மர்மம் நிறைந்த சம்பவமாக எழுத்தாளர் ருஷ்டியின் விஷயம் போய்க்கொண்டிருக்கின்றது.

இந்த விஷயத்தில் ஈரானைப் பல நாடுகள் கண்டித்துள்ளன; தொடர்புகளைத் துண்டித்தும் வருகின்றன.

ஆனால் கோமெனி பிடிவாதமாக இருந்துவருகிறார்.

ருஷ்டி மீதான மரண தண்டனை தீர்ப்பு இன்னமும் செல்லுபடியாகும் என்று அறிவித்திருக்கின்றார்.

விஷயம் எங்குபோய் நிற்குமோ என்று சொல்லமுடியாத நிலையாக உள்ளது.

(எ-4)

(5ஆம் பக்கத்தில் மற்றும் ஒரு தொகுப்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண வைபவங்களுக்கேற்ற
* பட்டுப் புடைவைகள்
* பட்டு வேஷ்டி சால்வைகள்
மற்றும்
இதர ஜவுளித் தெரிவுகளுக்கும்
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.


# உதயன்

26 - 02 - 1989 ஞாயிற்றுக்கிழமை


சேட்டிங் சூட்டிங்
* குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
* றெடிமேட் ஆடைகளுக்கு
சிறந்த இடம்
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, :-யாழ்ப்பாணம்.

■ **Vacancy for Doctor**

Wanted a resident dedicated doctor with M B.B.S. qualification and a minimum of five years experience for **St. Lukes Methodist Hospital** Puttur. Salary negotiable

Apply : **Manager**
St. Lukes Methodist Hospital,
9, Vembadi Road,
(C/1615) JAFFNA.

**குறைந்த கட்டணத்தில்**
உங்கள் பயணங்களை
மேற்கொள்ளலாம்.

* குறைந்த கட்டணத்தில் உங்கள் விமானடிக்கட்டுக்களை பதிவுசெய்து கொள்ளுங்கள். விசா, வெளிநாட்டுச் செலாவணி யாவும் செய்து தரப்படும்.
* கனடா, ஜேர்மன், சிங்கப்பூர் மலேசியா, பாங்கொக், இந்தியா, மத்திய கிழக்கு நாடுகளுக்கு விசேட விமானக் கட்டணங்கள் உண்டு.

நேரடியாகவோ அன்றி தொலைபேசிமூலமோ தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.-

**Unitrades Travels & Tours Limited**
First Floor, Hidramani Building,
63 1/8, Chatham Street,
COLOMBO 1
Telephone: 26826/34409
C/ 1427

## கச்சேரிகள்...

சாளர்களும் நியமிக்கப்படுவர்.

ஆரம்பத்தில் இந்த அதிகாரிகளுக்கு தேவைப்படும் நிலையான தகுதிகள் (Standard qualifications) குறைக்கப்படலாம்.

— இப்படி துணை அமைச்சர் தெரிவித்தார். (ஒ-எ)

## பொற்பதி.....

யிட்டுள்ளது.

பாதிப்புற்ற குடும்பங்கள் அகதிகளாகி, நாளைய வாழ்வை நெஞ்சார நினைக்கவும் முடியாத துன்பகர நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள தால் அவர்களுக்கு உதவ "கைஸ்" ஏற்பாடு செய்து வருவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பொருட்டு, தனியார் கல்வி நிலையங்கள், வியாபார நிறுவனங்கள், வீடுகளில் உதவிப் பொருள்களைப் பெற 'கைஸ்' உறுப்பினர் செல்வர் எனவும் மேலும் கூறப்பட்டுள்ளது. (அ)

## ரோஹண.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நான்காம் மாடிக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

அவசரகாலச் சட்டம் காலாவதியானதைத் தொடர்ந்து இவர் கம்பஹா மேல் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டார்.

ரோஹண விஜயவீராவின் மைத்துனர் என்ற காரணத்திற்காக மட்டுமே தான் கைது செய்யப்பட்டு துன்புறுத்தப்பட்டதாக டாக்டர் பெர்ணண்டோ தனது அடிப்படை உரிமைமீறல் மனுவில் கூறியிருக்கிறார்.

இவரது மனுவில் பிரதிவாதிகளாக முன்னாள் பொலீஸ் மாஅதிபர் சிறில் ஹேரத், தற்போதைய பொலீஸ் மாஅதிபர் எர்னஸ்ட் பெரேரா, சட்ட மாஅதிபர், பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் உட்பட பதினொரு பேர் பிரதிவாதிகளாகக் காட்டப்பட்டுள்ளனர். (உ-எ)

## தமிழ்க்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்தவும் உதவும்.

தமிழ்த் தீவிரவாதப் போட்டி அமைப்புக்கள் பழிவாங்கும் நோக்கத்தோடு கொலைச் செயல்கள் போன்ற தேவையற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. இது அமைதி முயற்சிகள் தளர்வடைவதற்கு ஒரு காரணமாகும்.

இந்த போக்கு மாற வேண்டியது அவசியம்.

— இப்படி திரு. பாலகுமாரன் செய்தியாளரிடம் சொன்னார் என்று இந்திய வானொலி தெரிவித்தது. (ஒ-எ)

## பஸ்தரிப்பு நிலையம் திறந்து வைப்பு

மாங்குளம், பெப் 26

ரெலோ இயக்கத் தலைவர் காலஞ்சென்ற திரு. சிறீ சபாரத்தினம் நினைவாக மாங்குளம் பஸ் நிலையத்தில் பஸ்தரிப்பிடம் ஒன்று நேற்றுக் காலை திறந்து வைக்கப்பட்டது.

மாங்குளம் பகுதி ரெலோ இயக்கத்தினர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

## கம்யூ. பிரமுகர் காலமானார்

நீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் தலைவர் திரு. எஸ் ரி. என் நாகரத்தினம் காலமானார்.

மனித உரிமைக்காகவும் தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகவும் பல போராட்டங்களை நடத்தி வெற்றி பெற்ற இவர் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய பிரமுகராகத் திகழ்ந்தவர். [ஒ-27]

## சீட்டிழுப்பில் வர்த்தகப் பிரமுகர்கள்

வடஇலங்கை சந்தைப்படுத்தல் அலுவலர் சங்கத்தினர் நடத்திய அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு நேற்றுக் காலை யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஆஸ்பத்திரி வீதிக் கிளை மண்டபத்தில் நடைபெற்றது.

அதிர்ஷ்டச் சீட்டுகளை வாங்கிய ஏராளமானோர் முன்னிலையில் சீட்டிழுப்பு நடைபெற்றது. பெருந்திரளான வர்த்தகப் பிரமுகர்களும் வந்திருந்தனர்.

பிரபல வர்த்தகர் திரு எஸ் வி. முருகேசு முதலாம் பரிசுக்குரிய சீட்டை எடுத்தார். இரண்டாம் பரிசுக்குரிய சீட்டை உதயன்-சஞ்சீவி ஆசிரியர் திரு. ம. வ. கானமயில்நாதனும், மூன்றாம் பரிசுக்குரிய சீட்டை பிரபல வர்த்தகர் எஸ். விருத்தாசலமும் அதிர்ஷ்டம் பார்த்தனர்.

யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்க முகாமையாளர் திரு சிவகுருநாதன், நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. எஸ். கனகசபாபதி, யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளர் வி எம் டிரான்ஸ்போர்ட்டேர்ஸ் சிற்றி மெடிக்கல் ஸ்ரோர்ஸ், விநாயகர் ஸ்ரோர்ஸ், முகன் ட்ரேடர்ஸ் ஆகியவற்றின் உரிமையாளர்களும் மற்றும் வர்த்தகப் பிரமுகர்களும், பார்வையாளர்களில் சிலரும் ஆறுதல் பரிசுகள் பெறும் ஐம்பது சீட்டுக்களை எடுத்தனர். (-)

# மரண அறிவித்தல்கள்

சட்டத்தரணி

## திரு. C. ஆறுமுகம்

சட்டத்தரணி திரு C. ஆறுமுகம் 11-02-89 இல் காலமாகி விட்டார். இவர் காலம் சென்ற அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், சரோஜினிதேவி, ரூபறஞ்சினிதேவி (U K.) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆறுமுகராசாவின் மாமனாரும், கமலலட்சுமி, செல்வலட்சுமி, தெய்வேந்திரராசா ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 17-02-89 வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இத்தகவலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
S. ஆறுமுகராசா (மருமகன்)
நந்தாவில், கொக்குவில்.
(9575)

## திரு. S.T.N. நாகரத்தினம்

திரு S T. N. நாகரத்தினம் (உரிமையாளர் புடைவைக்கடை S T நாகலிங்கம் அன் கோ, சுன்னாகம்) அவர்கள் சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. நன்னித்தம்பி, திருமதி தங்கத்தின் சிரேஷ்டபுதல்வனும் திரு திருமதி நாகலிங்கம், திருமதி பொன்னம்மாவின் பெருமகனும் சிவரூபராணியின் அன்புக்கணவரும், திருமதி விஜயலட்சுமி (கனடா), திருமதி தங்கலட்சுமி, திருமதி பொன்ருஜலட்சுமி (மே ஜெர்மனி), செல்வி பாக்கியலட்சுமி, செல்வன் லெனின் நாகலிங்கம் (கனடா), செல்வன் கஸ்ரோ நாகலிங்கம் (கனடா), செல்வன் ஏன்ஜெல்ஸ் நாகலிங்கம் செல்வி நவலட்சுமி, செல்வன் மாக்ஸ் நாகலிங்கம் (சைந்தவரோதயாக் கல்லூரி) ஆகியோரின் அன்புத்தந்தையும், திரு. நடேசரத்தினம் திரு நல்லகுணரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், திரு. நவரத்தினம் (கனடா) திரு. லோகேஸ்வரன் (உரிமையாளர் நியூசிற்றி பார்மஸி, சுன்னாகம்), திரு. யோகநாதன் (மேற்கு ஜெர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், கம்சுவி, நகுலேஸ்வரன், கிரேஜினி, நந்தீஸ்வரன், குமுதினி நாகேஸ்வரன் இலங்கேஸ்வரன் மிர்நாளினி, ஸ்ரலின் நாகலிங்கம் ஆகியோரின் பெரிய தந்தையும், விஜயந்தி (கனடா), சிந்து ரேகா நிலாணி (மே, ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 26-2-89 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு சுன்னாகத்திலுள்ள அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு ஈமக்கிரியைகள் கொத்தியாலடி மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
சந்தை ஒழுங்கை, சுன்னாகம்
(9572)

## திரு. நா. க. தம்பித்துரை

கோண்டாவிலைச் சேர்ந்த நா. க தம்பித்துரை காலமானார். இவர் அருளம்மாவின் அன்புக் கணவரும், இலங்கநாதன், தவமலர், செல்வநாதன், சிவலிங்கம் [சுவிற்சலாந்து], றஞ்சினிதேவி நடேசலிங்கம் [சுவிற்சலாந்து] ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், பாலசுப்பிரமணியம், யோகரட்ணம், கமலாதேவி, மோகனரூபாராணி ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 26-2-89 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் அன்னாரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோண்டாவில் கிழக்கு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு பாலசுப்பிரமணியம்,
மருமகன்.
இராமகிருஷ்ண வீதி, கோண்டாவில்.
[9391]

## திரு. கனகசபை ஆலாலசுந்தரம்

பொலிகண்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், ஆவரங்காலில் வசிப்பவரும் ஆகிய இளைப்பாறிய ஆசிரியர் திரு கனகசபை ஆலாலசுந்தரம் நேற்றுக் காலமானார்.

இவர் செல்லம்மாவின் அன்புக் கணவரும் தர்மசௌரி, கேதாரகௌரி, அமிர்தகௌரி [ஆசிரியை புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரி], பரமேஸ்வரன் [France] ஆகியோரின் அருமைத் தந்தையும், ந. சிவகணேசன் [France], சோ. சபாரத்தினம் (பதிவாளர் கொழும்பு பல்கலைக்கழகம்) ஆகியோரின் அருமை மாமனாரும்; காலம் சென்ற இளைப்பாறிய மலாயன் பென்ஷனியர் ஆ சின்னத்துரை அவர்களின் அருமை மருமகனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 26-02-89 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெற இருப்பதால் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மக்கள்.
ஆவரங்கால்.
[9579]

## திரு. செபஸ்தி இராயப்பு

பண்டத்தரிப்பைச் சேர்ந்த செபஸ்தி. இராயப்பு காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற அந்தோனி செபஸ்தி, திருமதி செபஸ்திரூசானம் ஆகியோரின் அன்புப் புதல்வரும் பூரணத்தின் அன்புக் கணவரும். காலஞ்சென்ற அமுதநாதர், திரு. வேதநாயகம். திரு. டேவிட் (சவூதி) திரு. டோன் வொஸ்கோ, திரு. டொமினிக் செல்வி கோலின் செல்வராணி. தங்கராணி, விசி ஆகியோரின் அன்புத் தந்தையும். காலம் சென்ற ஜூயிஸ், காலஞ்சென்ற மரியாட்சி, காலஞ்சென்ற அருளப்பு, காலஞ்சென்ற அன்னம்மா, செபஸ்திமார்க்கு, செபஸ்தி யோசேப்பு, பிரகாசி, ஞானம்மா (யாழ்ப்பாணம்) திரேசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். பூதவுடல் அடக்கம் செய்வதற்காக 26-2-89 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3 மணியளவில் பண்டத்தரிப்பு செபமாலை மாதா சேமக்காலைக்கு அன்னாரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
வேதநாயகம்.
பண்டத்தரிப்பு
9653

## திருமதி தம்பிஐயா இரத்தினம்பாள்

சங்கானை மேற்கு வடலியடைப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இரத்தினம்பாள் அவர்கள் 25-02-89 இல் காலமானார்.

இவர் காலம் சென்ற தம்பிஐயாவின் அன்பு மனைவியும், காலம் சென்ற கமிர்தலக்ஷ்மி, சரவணபவன் (கனடா), சண்முகபவன் (வாக்கர் & கிறீ), திரிபுரபவன் (போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சரஸ்வதி அம்மாவின் அன்புச் சகோதரியும், சந்திராதிக்கா, பரமேஸ்வரி, லோகேஸ்வரி, வரலக்ஷ்மி (உதவி அரசாங்க அதிபர் பணிமனை, சண்டிலிப்பாய்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவானந்தசோதி, துவாரகாதேவி, சுகேந்திரன், சனகேஸ்வரி, டிவாவி, மேகலா, தரணீதரன், நிமலன், நிருஷா ஆகியோரின் அன்புப் பேத்தியும், கிருஷாந்தனின் அன்புப் பூட்டியுமாவார்.

ஈமக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் ஞாயிறு காலை 9.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் விளாவெளி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. சண்முகபவன்.
வடலியடைப்பு
[9577]

## மரண அறிவித்தல்

### திருமதி பேபி நவரட்னம்

இளவாலையைச் சேர்ந்த திருமதி பேபி நவரட்னம் 22-02-89 இல் காலமானார். அன்னார் மரியாம்பிள்ளை பிரான்சிஸ் நவரட்னம் அவர்களின் (Ret. Asst. Supdt of Surveys) அன்பு மனைவியும் ஜோன் பிலிப் பிரேம்ராஜ் (லண்டன்), வசந்திமேரி தியோபிலின் (லண்டன்) சுதர்ஸன் செபஸ்தியான் பிரான்சிஸ் (கனடா) சௌரி பிரான்சிஸ்கா (கனடா) அன்ரன் ஜோசெப் சந்திரகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி புஷ்பா குணரட்னம் (லண்டன்) அல்பிரட் திஸநாயகம் (லண்டன்), ரவீந்திரன் யேசுதாசன் (கனடா) ஆகியோரின் மாமியாரும் யோகான், டேமியன் ஆகியோரின் பேத்தியாருமாவார். அன்னாரின் பூதவுடல் 27-02-89 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு இளவாலை அன்னம்மாள் கோவிலில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின் நல்லடக்கம் இளவாலை சேமக்காலையில் நடைபெறும்.

தகவல்:
சுதர்ஸன் நவரட்னம்
இளவாலை
(9652)




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிடெட் [illegible] நாவலர் வீதி, 392/2, [illegible] 26-02-1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt.) Ltd 392/2 Navalar Road, Jaffna Sunday 26th February 1989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org